
**SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM**




ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
( தேரழுந்தூராண்டவன் )

श्रीमते श्रीवेदान्त रामानुज महादेशिकाय नमः

श्रीमच्छ्रीवास योगीश्वर पदविनतं लब्ध वेदान्त युग्मं
श्रीपादूसेवि रामानुजमुनि तिलकात्तत्पद न्यस्तभारम् ।
श्रीमच्छ्रीवास रामावरजमुनि मणेर्लब्ध मोक्षाश्रमं तं
श्रीमद् वेदान्त रामानुज यति नृपतिं संश्रये ज्ञानवार्द्धिम् ।।

# ஆச்ரம வரலாறு
# ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
# ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன்

**Anugraham**



**Pitadhipathi Srimad Andavan SriVaraha MahaDesikan**

© Srirangam Srimad Andavan Ashramam

Document redesigned and republished using
**Google Translate** and **TT28 Publisher** @ **www.aradhanam.org**


॥ श्रीः ॥
श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः
ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
(தேரழுந்தூர் ஆண்டவன்)
ஆவணி—புரட்டாதி

॥ श्रीः ॥

श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः



ஸ்ரீமச் ஸ்ரீவாஸயோகீச்வர பதவிநதம் லப்தவேதாந்த யுக்மம்


ஸ்ரீபாதுூஸேவி ராமாநுஜமுநி திலகாத் தத்பத ந்யஸ்த பாரம் ।

ஸ்ரீமச் ஸ்ரீவாஸராமாவரஜமுநிமணேர் லப்தமோக்ஷாச்ரமம் தம்

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதிந்ருபதிம் ஸம்ச்ரயே ஜ்ஞாநவார்த்திம் ॥

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணிபாதுகாப்யாம் நம :



# ஸ்ரீரங்கம்
# ஸ்ரீமத் ஆண்டவன்
# ஆச்ரம வரலாறு

வெளியீடு :

**ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்**

31, தேசிகாச்சாரி சாலை, மைலாப்பூர், சென்னை=4

நந்தந ஹு ஆனி மீ 19 உ

ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனின்

24 ஆவது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தன்று

வெளியிடப்பட்டது.

3 - 7 - 2012

# ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய குருபரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 பெரியநம்பி
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்
12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்
13 நடாதூர் அம்மாள்
14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
17 கடிகாாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
18 ஆதிவண்ஶடகோப ஸ்வாமி
19 வரதவிஷ்ண்வாசாரியர்
20 மஹாதயாதீஸ
21 அஹோபிலாசார்யர்
22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
23 பஞ்சமதபஞ்ஜநம் தாதாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 உபநிஷத்பாஷ்யகாரர்
26 ரங்கநாத ஸ்வாமி

27 வீரராகவாசார்யர்

28 ஸ்ரீரங்கபதி தேபபிகர்

29 கல்யாணாவஹ ரங்நாத ஸ்வாமி

30 ஸாக்ஷாத் ஸ்வாமி

31 திருக்குடந்தை தேஶிகன்

32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்

33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

34 பெரியாண்டவன்

35 சின்னாண்டவன்

36 காடந்தேத்தி ஆண்டவன்

37 தேரழுந்தூர் ஆண்டவன்

38 ஆக்கூர் ஆண்டவன்

39 தென்பரை ஆண்டவன்

40 திருக்குடந்தை ஆண்டவன்

41 மைஸூர் ஆண்டவன்

42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீரஹஸ்ய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 பெரியநம்பி
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 (மடைப்பள்ளிஆச்சான்) ப்ரணதார்த்திஹராசார்யர்
12 ஆத்ரேய ராமானுஜாசார்யர்
13 ஆத்ரேய ரங்கராஜாசார்யர்
14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
17 கடிகாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
18 வரத விஷ்ணுவாசார்யர்
19 மஹாதயாதீஶர்
20 அஹோபிலாசார்யர்
21 வாத்ஸ்ய வரதாசார்யர்
22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
23 பஞ்மதபஞ்சநம் தாதாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 ராமானுஜசார்யர்
26 வாத்ஸ்யவேங்கடேஸாசார்யர்

27 வீரராகவாசார்யர்
28 ஸ்ரீரங்கபதி தேப்பிகர்
29 கல்யாணாவஹ ரங்நாத ஸ்வாமி
30 ஸாக்ஷாத் ஸ்வாமி
31 திருக்குடந்தை தேஶிகன்
32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
34 பெரியாண்டவன்
35 சின்னாண்டவன்
36 காடந்தேத்தி ஆண்டவன்
37 தேரழுந்தூர் ஆண்டவன்
38 ஆக்கூர் ஆண்டவன்
39 தென்பரை ஆண்டவன்
40 திருக்குடந்தை ஆண்டவன்
41 மைஸூர் ஆண்டவன்
42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீபகவத்விஷய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 திருமாலையாண்டான்
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்
12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்
13 நடாதூர் அம்மாள்
14 அப்புள்ளார்
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 நயினாராசார்யர்
17 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
18 கடிகாாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
19 ஆதிவண்ஶடகோபர்
20 த்ருதீய பராங்குஸ ஸ்வாமி
21 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
22 வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்
23 ஸ்ரீாைல ஸ்ரீநிவாஸாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 முநிவாஹந ஸ்வாமி
26 சந்த்ரகிரி வேங்கடாசாரியர்

27 கல்யாணாவஹ ரங்கநாத ஸ்வாமி
28 ஸாக்ஷாத் ஸ்வாமி
29 பாதுகாஸேவகராமானுஜ ஸ்வாமி
30 திருக்குடந்தை தேஶிகன்
31 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
32 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
33 பெரியாண்டவன்
34 சின்னாண்டவன்
35 காடந்தேத்தி ஆண்டவன்
36 தேரழுந்தூர் ஆண்டவன்
37 ஆக்கூர் ஆண்டவன்
38 தென்பரை ஆண்டவன்
39 திருக்குடந்தை ஆண்டவன்
40 மைஸூர் ஆண்டவன்
41 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் பரம்பரையில் ஆசார்யர்களின் சுருக்கமான விவரங்கள்.

## ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன்

வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன்: அவதாரம் - மாடபூசி நைத்ருவ காய்யப கோத்ரத்தில் ஸ்ரீநிவாஸாசார்யரின் திருக்குமாரராக 1743 ருதிரோத்காரி ஆவணி பூரட்டாதியில். ப்ரம்ஹசர்யத்தி லிருந்து ஸந்யாஸாஸ்ரமம். ஸந்யாஸம் ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகனிடம். காலக்ஷேபம் ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகனிடம். ப்ரபத்தி ஆசார்யர் திருக்குடந்தை தேசிகன். ஆராவமுதாழ்வான் திருவடிகளில் ப்ரபத்தி. 72 திருநக்ஷத்ரங்களுக்கு மேலும் எழுந்தருளியிருந்ததாகவும், சுமார் 52 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளதாகவும் தெரிகிறது.

## ஸ்ரீமத் திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகன் .அவதாரம் விளக்குடி க்ராமம். ஈயுண்ணி பாரத்வாஜ வம்ஸம். ஐப்பசி உத்திரட்டாதி. வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில்.

## பெரியாண்டவன்:

ஸ்ரீநிவாஸ ஸ்ரீமத் மஹாதேஸிகன். பூர்விகம் காஞ்சீபுரம் அருகில் பிலியரணை எனும் ஸ்ரீக்ராமம். அவதாரம் : காஞ்சீபுரத்தில் ஸாண்டில்ய கோத்ரம் பகல் தீவட்டி ( திவா ப்ரதீபம்) ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருக்கு திருக்குமாரராக. 25.2.1801 கலி 4900 ரெளத்ரி மாசி புஷ்யம் . அவதாரத் திருநாமம்

ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். ஸமாஸ்ரயணம் ஸாமா பெரியப்பன் ஸ்வாமியிடம். ப்ரபத்தி ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில் ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் ஸன்னிதியில். வேதாந்த காலக்ஷேபம், 30 திருநக்ஷத்ரத்தில் பூண்டி ஆஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ திருத்துறைப் ஆண்டவனிடம். 54 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 1884 ல் தைமாதம் க்ருஷ்ணபக்ஷ த்ரயோதசியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்.

## ஸ்ரீமத் சின்னாண்டவன்

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் - வேளியநல்லூர் ஸங்கபுரம் பஸடமர்ஷண கோத்ரம் ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யருக்கு திருக்குமாரராக. 1826 விய வர்ஷம் கார்த்திகை மகம். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸராகவாசார்யர். காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் ஸ்ரீமத் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் சன்னிதியில். ஸந்யாஸம் 1883 சுபானு ஐப்பசி மாதம். பத்து சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 68 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1894 விஜய வர்ஷம் தை சுக்ல சப்தமியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் காடந்தேத்தி ஆண்டவன்

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் காடந்தேத்தி ரகுநாதாசார்யருக்கும் ஜானகி அம்மாளுக்குக்கும் திருக்குமாரராக 1829 விரோதி வர்ஷம் ஆவணி மூலம்.அவதாரத் திருநாமம் வரதவேதாந்தாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி பெரியாண்டவனால்

பெரியபெருமாளிடத்தில். 1905 ல் விஸ்வாவஸு வர்ஷம் ஆவணி மாதம் 76 திருநக்ஷத்ரத்தில் ஸந்யாஸம் 38 ஆம் பட்டம் திருக்குடந்தை அழகிய சிங்கரிடம். 1909 கீலக மாசி க்ருஷ்ணபக்ஷ த்வாதசியன்று அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் தேரழுந்தூர் ஈயுண்ணி பாரத்வாஜ கோத்ரம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராக 1872 ப்ரஜோத்பத்தி ஆவணி பூரட்டாதி . ஸமாஸ்ரயணம் பெரியாண்டவனிடம். வேதாந்த காலக்ஷேபம் ப்ரபத்தியும் சின்னாண்டவனிடம். சின்னாண்டவன் திருவடிகளில். ஸந்யாஸம் 36 திருநக்ஷத்ரத்தில் 1908 ல் கீலக வர்ஷம் ஆவணி மாதம் ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவனிடமிருந்து. 39 ஆம் பட்டம் ஸ்ரீ மன்னார்குடி அழகிய சிங்கருக்கு ஸந்யாஸாஸ்ரமம் கொடுத்து அனுக்ரஹித்தார். 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 60 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1932 ல் ஆடி க்ருஷ்ண பஞ்சமியில் ப்ரஜோத்பத்தி திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் காஞ்சீபுரம் பாதுகாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் :

ஸ்ரீநிவாஸ மஹாதேபஸிகன். அவதாரம் மௌத்கல்ய கோத்ரம் ஆக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு 1880 விக்ரம வர்ஷம் புரட்டாசி உத்ரட்டாதி. பூர்வாஸ்ரம திருநாமம் ரங்கநாதாசார்யர். பஞ்ச ஸம்ஸ்காரம் தம் மாதுலரிடத்தில் . வேதாந்த காலக்ஷேபம் தேரழுந்தூர் ஆண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ தேவப் பெருமாள் திருவடிகளில், ஸ்ரீ

தேரழுந்தூர் ஆண்டவனிடம் ஸந்யாஸம் ஸ்வீகரித்திருந்த திருக்குடந்தை நாராயண யதியினிடத்தில் 1932 ல் ஸ்ரீரங்கம் ஆஸ்ரமத்தில் ஸந்யாஸம். 17 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்தாயிற்று. 1947 ல் விய வர்ஷம் பங்குனிக்ருஷ்ணத்வாதசியில் 19.3.1947 அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன்

ரங்கநாதமஹாதேஸ்ரிகன். அவதாரம் தென்பரை வங்கீபுரம் பாரத்வாஜம் சேஷாத்ரியாசார்யருக்கும் செங்கமலத்தம்மாளுக்கும் திருக்குமாரராக 19.8.1886 விய வர்ஷம் ஆவணி ரேவதியில். அவதாரத் திருநாமம் வேங்கட ராகவாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனிடம். தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ வடுவூர் சக்ரவர்த்தித் திருமகன் திருவடிகளில் ப்ரபத்தி. ஸன்யாஸம் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனிடமிருந்து 6.10.1946 விய வர்ஷம் ஐப்பசி 21 சுக்ல த்வாதசி யன்று. 15 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 5.4.1963 ல் சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியில் 76 திருநக்ஷத்ரத்தில் தமக்கு அடுத்த ஆசார்யர் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனுக்கு ஸ்தானம் அருளின அன்றே திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்தராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் ஆத்ரேய கிடாம்பி திருக்குடந்தை ஸ்ரீ பத்மநாபாசார்யர் கோமளவல்லி தம்பதிக்கு 1907 பராபவ பங்குனி புஷ்யம் அன்று அம்மான்

க்ருஹம் ராயம்பேட்டை க்ராமம் காருகுடி அக்ரஹாரத்தில். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். இவரை ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி என்று அழைப்பர். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத் விஷயம், கீதாபாஷ்யம் காலக்ஷேபம் ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவன் திருவடிவாரத்தில். ஸ்ரீபாஷ்யாதிகள் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் திருவடிவாரத்தில் . ப்ரபத்தி ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனால் ஆராவமுதாழ்வான் திருவடிகளில். ~~ 5.4.1963 சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியன்று 56 திருநக்ஷத்ரத்தில். 26 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 10.4.1989 விபவ வர்ஷம் பங்குனி சுக்ல பஞ்சமியில் திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன். அவதாரம் கௌண்டின்ய கோத்ரம் ஹரிஹரபுரம் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் ஸ்ரீ ரங்கநாயகம்மா தம்பதிக்கு 19.8.1909 ஸௌம்ய ஆவணி மாதம் உத்தரம் திருநக்ஷத்ரத்தில் ஸோஸலை க்ராமத்தில். அவதாரத் திருநாமம் கோபாலாசார்யர். ஸமாஸ்ரயணமும் ப்ரபத்தியும் 14 திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் திருவடிகளில். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீஆக்கூர் ஆண்டவன் திருவடிகளில். 11.4.1988 ப்ரபவ வர்ஷம் பங்குனி மாதம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனிடமிருந்து ஸந்யாஸம். ஒரு சாதுர்மாஸ்யம். 22.5.1989 வைகாசி க்ருஷ்ண த்விதீயை அன்று திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசரிகன். அவதாரம் பாரத்வாஜம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராய் திருவஹீந்த்ரபுரத்தில் 1935 யுவ வர்ஷம் வைகாசி திருவாதிரையில். பூர்வாஸ்ரமத் திருநாமம் ஸ்ரீ பூவராஹாசார்யர். திருத்தகப்பனாரிடம் ஸமாஸ்ரயணம். வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ப்ரேஷ மந்த்ரம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில். ஸந்யாஸாஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ பெரியாண்டவன் ப்ருந்தாவனத்திலிருந்து 1.6.1989 விபவ வைகாசி மாதம் க்ருஷ்ண த்வாதசி . 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளபடி.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ரங்கநாத மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேரிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேமிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேமிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

## ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

நாமெல்லாரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனப்படுகிறோம். விஷ்ணு என்றால் உடலுள் உயிர் போல் திடவிசும்பு எரி வளி நீர்நிலம் இவைமிசை... உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன் .. என்கிறபடி, எல்லாவற்றையும் வ்யாபித்தும் தரித்தும் நியமித்தும் இதுகளால் வரும் பெருமையை அடைந்து சேஷியாயும் ஸ்வாமியாயும் ஆத்மாவுமாகவும் இருப்பவன். நாமெல்லோரும் அவனால் தார்யர்களாயும் நியாம்யர்களாயும் சேஷராயும் தாஸர்களாயும் இருப்பதால் அவனுக்குச் சரீரமெனப்படுவோம். விஷ்ணோ: இமே... வைஷ்ணவா: என்று சரீர சரீரிபாவ ஸம்பந்தமுடையவர்கள். இன்னும் நமக்கு விஷ்ணுவே மாதா பிதா என்கிறபடி விஷ்ணுவுடன் பல சம்பந்தமுடையவர்கள் வைஷ்ணவர்கள்.

விசிஷ்டாத்வைத மதத்தில் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுபவனும் நாராயணனே. நமக்கு இவனே ஈஸ்வரன், ஸ்வாமி, பரதேவதை. இந்த மதத்தில் ஈஸ்வரன் என்பதுபோல் ஈஸ்வரி என்றும் சொல்லப்படுகிறபடியால், நமக்குத் தாயார் மஹாலக்ஷ்மி இருவர்களும் யஜமானர் யஜமானிகள். தாய்தந்தைகள் குழந்தைகளை ரக்ஷிப்பதற்கும் நாம் அவர்களை அவர்களிஷ்டப்படி பெருமைப் படுத்தவும், கார்யம் செய்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை நாம் இப்பொழுது செய்து கொண்டிருக்கவில்லை. அநாதியாய் நாம் செய்த அபராதத்தால் கோபம் கொண்ட ராஜாவாய் இருக்கும் தகப்பன், தப்புச் செய்யம் பிள்ளைகளை அவர்களின் நன்மைக்காக சிறைச் சாலையில் போடுவதுபோல் நம்மை இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் தள்ளியிருக்கிறான். இந்தப் பாழும் ப்ரக்ருதியோ உள்ள ஸ்வரூபத்தை மறைத்தும், விபரீத ஜ்ஞானத்தை விளைவித்தும் தன் விஷயத்தில் போக்கியதையை உண்டுபண்ணக் கூடியது. அதனுடைய சம்பந்தத்தால் நாம் ஸ்வரூபத்தை மறந்து நமக்கு கர்ம லப்தங்களான தேஹங்களில் போக்யத்வ புத்தியை உண்டுபண்ணிக் கொண்டு இந்த ஸம்ஸாரத்தில் பிறப்பும் இறப்பும் உள்ளவர்களாய் இருந்து கொண்டு கரை ஏற வழி தெரியாதவர்களாக இருக்கிறோம்.

நாம் இப்படியிருந்தும் பரம காருணிகனாயும் குடல் துவக்கு (சம்பந்த)முள்ளவனுமான ஸர்வேய்வரன் கெட்ட பிள்ளைகளை நல்ல வழி நடத்தப் பாடுபடுவதுபோல் நாம் அறியாமல் செய்த தப்புகளைத் தள்ளியும் மற்றவைகளை மன்னித்தும், அஜ்ஞாதமாகவும், யாத்ருச்சிகமாகவும், ப்ராஸங்கிகமாகவும் நேர்ந்தவைகளுமான சுக்ருதங்களை முன்னிட்டு இந்த நல்ல

ஜன்மத்தைக் கொடுத்ததுபோல் நற்கதியை அளிக்கவும் வழி பண்ணுகிறான்.

இந்த ஸம்ஸார மென்பது எட்டிமரம் போல் அண்டினவனை அழியச் செய்யக் கூடியது. அதிலும் பிழைப்பிக்கும் பழம் இரண்டு. ஒன்று பகவத்பக்தி. இன்னொன்று ஸத்ஸங்கம். ஸத்ஸங்கத்தை மோக்ஷவாசலாய்ச் சொல்லுவார். அந்த ஸத்ஸங்கத்தை உண்டுபண்ணியும் அந்த ஸத்துக்களிடம் அத்வேஷம், ஆபிமுக்யம், சம்பாஷணம் இவைகளையும் உண்டுபண்ணி நல்ல ஆசார்யர்களை அடைவிப்பிக்கிறான்.

ஆசார்யர்கள் என்பவர்கள் பகவதவதாரங்களே. முன் யுகங்களில் ஹிரண்யகசிபு ராவணாதிகள் போன்றவர் தேஹபலத்தால் சாதுக்களை ஹிம்ஸித்து வந்தார்கள். இந்த யுகத்தில் அவர்களைப் போன்றவர்கள், புத்தி பலத்தால் வேதபாஹ்யர்களாயும் வேதத்துக்குச் சரியான அர்த்தம் தெரியாதவர்களாயும் பிறந்து, கெட்ட மதங்களை உண்டுபண்ணி நம் புத்தியைக் கெடுப்பார்கள். காணாதாள், சாக்கியாள், பாஷண்டாள், இவர்களால் வேதமார்க்கம் முன்பு அழிக்கப்பட்டது. அவர்களைப் பகவான் திரிதண்ட தாரியாய் தத்தாத்ரேயராய் அவதரித்து அந்த மதங்களை நிரஸித்து அந்த வேதமார்க்கத்தை ரக்ஷித்தார். இன்னும் கிணற்றில் விழுந்த குழந்தையைக் கையால் எடுப்பதுபோல், ஸம்ஸாரத்தில் விழுந்த நம்மை சாஸ்த்ரமென்கிற கையால் எடுப்பதற்காக பல ஆசார்யர்கள் ரூபியாக அவதரித்தவன்.

இப்படி அவதரித்தும் நாம் ஏற்கனவே கொடுத்த வேதம் சாஸ்த்ரம் முதலியவை விஸ்தாரமுள்ளன. இவர்களோ அல்பஞர்கள். அல்ப சக்திகள், அல்ப ஆயுஸ் உள்ளவர்கள்.

அதற்காக அந்த வேதங்களுக்குள் ஒன்றான அதர்வ வேதத்தின் பிரஸான உபநிஷத்தில் பிரியச் சொல்லி, ஒன்றாகச் சேர்க்கப்பட்ட அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தை நரநாராயண ரூபியாய் அவதரித்து குரு சிஷ்ய ரூபியாய் உபதேசிதது நாரதாதிகளையிட்டுப் பரவச் செய்தான். இம்மந்த்ரம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுவதுபோல் நாம் அறியவேண்டிய எல்லாச் சங்கதிகளையும் காட்டக் கூடியது. இதனால் ஸ்வரூப ஜ்ஞானம் தெரிந்து நமக்கு வேண்டிய புருஷார்த்தத்தையும் அதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தெரிந்து அனுஷ்டிக்க வேண்டியதற்காக பாஞ்சராத்ராதிகளில் சொல்லப் பட்டிருக்கும் த்வயம், கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள சரம ஸ்லோகம், ஆக இந்த மூன்று மந்த்ரங்களையும் ஸத்குருவை அடைந்து உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது. இப்படிப் பெற்றாலும் நமக்கு நல்ல புத்தி உண்டாவது கஷ்டம்.

ஏனெனில் நாம் பூர்வ ஜன்மங்களில் ஆசுர ஸ்வபாவத்தை அடைந்து பகவத் த்விட்டுகளாயிருந்த படியால் நம்மை நரகாதிகளில் தள்ளியும் இவர்கள் நம்மை அறியக் கடவர்களில்லை, இவர்கள் நம்மை வசீகரிக்க கடவர்களில்லை, என்று ஈஸ்வரன் பூர்வாபராதத்தால் இட்ட நினைப்பு ஈடுமாறுவதற்காக அஸ்துமே.. என்றால் அஸ்துதே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே,.. என்ற திருமுகப் பாசுரமும் ஸதாசார்யன் அனுக்ரஹமும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தி என்றும் மூன்று ப்ரதான காரணங்கள்.

தாயார் கடாக்ஷமில்லாவிடில் நல்ல புத்தி, நல்ல நடவடிக்கை உண்டாகாது. ஆதலால் அவள் கடாக்ஷம் வேணும்.

கூடியவரையில் ஸாத்விகர்களாயும் ஆவச்யக விஷயத்தில் ஞானக் குறைவு இல்லாதவர்களும், டம்பம் அசூயை ஏமாற்றல் இவைகள் இல்லாதவர்களுமான நல்ல ஆசார்யர்கள் இவனுக்கு நல்ல க்ஷேமங்கள் உண்டாக வேண்டுமென்று அவர்கள் நினைப்பதாகிற அனுக்ரஹமும் வேண்டும். பிறகு, தான் ஸத்வோத்தரனாய் ஸம்யகுபஸந்நனாய் ஸாவதானனுமாய் இருக்கும் அவஸ்தையில் க்யாதி லாப பூஜா நிரபேக்ஷகர்களாய்ப் பரமகாருணிகர்களான ஸதாசார்யர்கள் அநபேக்ஷித விஸ்தரமும் அபேக்ஷித ஸங்கோசமும் இல்லாதபடி ஸர்வலோகங்களுக்கும் பிதாவும் மாதாவுமாயிருக்கும் ஸ்ரிய:பதி நாராயணன் அவன் எல்லாரையும் காக்கும் இயல்பினன் என்றபடி சரண்ய பூதன், அவனையே சரணமடையுங்களென்று சாதிக்கும் சுருங்கிய உபதேசத்தையும் பெற வேண்டும். இப்படி நாம் குரூபதேசத்தைப் பெற்றால்தான் நமக்கு நன்மை விளையும்.

அவர்கள் நமக்கு உபதேசம் பண்ணும் போது, முன்பு ஜன்மத்தால் ஸூத்ரனாய் பிறந்து ப்ரஹ்மோபதேச மென்ற கர்மத்தால் ப்ராஹ்மணனாக ஆகியிருக்கும் நம்மை ப்ரஹ்மோபதேசத்துக்கு முன்பு ஜாதகர்மம், நாமகரணம் அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் என்கிற கர்மங்களால் ஸம்ஸ்கரிக்கப் பட்டிருப்பதுபோல் காயத்ரியிலும் பெரியதும் ஸகல வேதம் முதலியவைகளை தன்னிடம் அடக்கிக் கொண்டுள்ளதும் அதை ஜபிப்பதால் அசூயை முதலிய ஆந்தர வ்யாதிகளையும் ஜ்வரம் முதலிய பஹிர்வ்யாதிகளையும் ஸ்வரூப ஜ்ஞானமில்லாமையாகிற பஞ்சத்தையும் பணப் பஞ்சத்தையும் 'நான், என்னுடையது' என்கிற அஹங்கார ஆத்மாபஹார சௌர்யாதிகளையும் போக்கி, தேஹாத்ம

விவேகம், ஆத்ம பரமாத்ம விவேகம் ஆகியவற்றை தரக் கூடியதுமான உபதேசத்தை சிஷ்யன் பெறுவதற்குத் தகுதியாக தாபம், புண்ட்ரம், நாம, மந்த்ரம், யாகம் என்கிற ஐந்து ஸம்ஸ்காரங்களையும் செய்வித்து, உபதேசிக்க வேணும்.

தாப மென்றால், நாம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணமுள்ள ப்ராக்ருத தேஹமுடையவர்கள். பரமாத்மா விஷயமான பவித்ரமான பஞ்சோபநிஷந் மந்த்ரங்களால் பாஞ்ச பௌதிக தேஹத்தை லயாதிக்ரமத்தால் ஸம்ஹரித்தும், மறுபடி ஸ்ருஷ்டியாதி க்ரமத்தால் ஸ்ருஷ்டிப்பதுமாகிய பூத சுத்தியைச் செய்து, அதில் அவர் சிந்நங்களான சங்க சக்ராதிகளை ஹோமாதிகளைச் செய்து சுத்தீகரித்து ஆசார்யர் அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லித் தரிப்பிக்கச் செய்ய வேணும்.

பிறகு நமக்கு, பாபத்தை போக்குவதும் ஆயுஸ்ஸை வளர்ப்பதுமான ஸ்வேதமிருத்திகை (திருமண்) மந்த்ரங்களைச் சொல்லிக் குழைத்து பகவத் பாதாக்ருதியாய் நெற்றி முதல் 12 இடங்களில் ஊர்த்வமுகமாய், ஸச்சித்ரமாய் தரித்தவைக்க வேணும், நம் மதத்துக்குத் தாயாரும் பரதைவதமாகையால் அவருடைய சின்னமான ஸ்ரீசூர்ணத்தை நடு இடங்களில் அவருடைய மந்த்ரங்களைச் சொல்லி ஆசார்யர் தரிக்கவைக்க வேணும்.

நாம் அவர்களுக்கு தாஸனனாதால் ஆசார்யர் சிஷ்யனுக்கு ராமதாஸன், க்ருஷ்ணதாஸன் என்று பேரும் வைக்க வேணும்.

பிறகு தன்னுடைய குரு பரம்பரையைச் சிஷ்யனுக்குச் சொல்லிவித்துத் தாங்களும் அனுசந்தித்துக் கொண்டு மூன்று மந்த்ரங்களையும் உபதேசிக்க வேணும். ஸ்ரீமத் ராமாயணம், பாதுகாஸஹஸ்ரம் இவைகளையும் உபதேசித்து ஸங்க்ரஹமாக பகவதாராதன க்ரமத்தையும் உபதேசிக்க வேணும்.

ஆகையால் நாமும் நல்ல குருக்களை அடைந்து பஞ்ச ஸம்ஸ்காராதிகளைச் செய்து கொண்டு உஜ்ஜீவிக்க வேணும். மந்த்ர மந்த்ரார்த்தங்களை க்ரஹித்து உபதேசித்துக் கொண்டு, 'நாம் யார், நமக்கு யஜமானன் யார், அவரை அடைவதால் வரும் பயன், அடைவதற்கு விரோதி, அதைப் போக்கும் வழி இவைகளாகிற அர்த்த பஞ்சகத்தை அறியவேண்டும். (1)நாம் (2) பெருமாளுடைய (3) கோபத்தைப் (4)போக்கிப் (5) பெருமாளிடம் போய், பெருமாளுக்குக் கார்யம் செய்ய வேணுமென்று இவ்வாறாக அர்த்த பஞ்சகத்தை நம்மாண்டவன் (ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்) எப்பொழுதும் இந்த புத்தி நமக்கு வரவேண்டியதற்காக ஸாதித்தாகும். இதை அறிந்தால்தான் வைஷ்ணவனாவோம்.

இவைகளை உபதேசிக்கிற ஆசார்யாளிடத்திலும் அவர்களுடைய பரம்பரையிலும் விசேஷப் ப்ரதிபத்தி வேணும். அதற்காக நம் ஸம்ப்ரதாய ஆசார்ய பரம்பரையைப் பற்றிக் கொஞ்சம் எழுதப்படுகிறது.

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஆதியில் ப்ரதமாசார்யன் பெருமாள். அவர் வேதம் முதலியதைக் காப்பாற்றி வ்யாஸாதி ரூபிகளாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து அதின் உபாய பாகத்திலுள்ள அர்த்தங்களைச் சுருக்கி ப்ரஹ்ம ஸூத்ரமென்றும் தர்ம ஸூத்ர மென்றும் செய்தருளினார்; ஸ்ரீ பாஞ்சராத்ர ஸாஸ்த்ரத்தை நேராகவே உபதேசித்தார்.

பிறகு 2வது ஆசார்யர் தாயார். அவர் பெருமாளிடமிருந்து பாஞ்சராத்ர ஸாஸ்த்ரத்தைக் கேட்டு லக்ஷ்மீ தந்த்ரம் முதலியவைகளால் வெளியிட்டருளினாள்.

3வது விஷ்வக்ஸேனர். இவருடைய அனுமதியின்றி ஒரு சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்காதாதலாலும் நம்மாழ்வாருக்கு ஸமாச்ரயணம் - மந்த்ரோபதேசம் இவைகளைச் செய்ததாலும் நம் மூன்றாவது ஆசார்யர்.

# ஆச்ரம வரலாறு

## ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன்

நம் ஆண்டவன் (ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்)

இப்படியிருக்கையில் 1908 ல் கீலக வர்ஷம் ஆவணி மாதம் ஸ்ரீகாடந்தேத்தி ஆண்டவனுக்குத் திடீரென திருமேனிப் பாங்குயில்லாமல் போகவே அப்பொழுதான் இவருக்கு மாதூகரம் ஸாதித்துவிட்டு திருமாளிகைக்கு எழுந்தருளின தேரழுந்தூர் ஸ்வாமி கேட்டு, பட்டினியோடு அதிவேகமாக ஓடிவந்து மந்த்ரோபதேசம் பெற்று அப்பொழுதே துவங்கி ஜீவஸ்ராத்தம் செய்து மறுநாள் ஆச்ரம ஸ்வீகாரமும் செய்து கொண்டார். திருத்தாயார் திருத்தகப்பனார் பத்னி எல்லோரையும் உடனே வேறு ஊருக்குப் போகும்படி செய்து திருமாளிகையும் விற்றுவிடச் செய்தார். ஆச்ரம ஸ்வீகாரத்தின்போது ஸ்வாமியின் திருக்குமாரருக்கு மூன்றே வயது.

ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவன் 1909 ல் கீலக மாசி மாதம் க்ருஷ்ண பக்ஷம் த்வாதசியன்று பரமபதித்தவுடன் அவருடைய கைங்கர்யத்தை ஸ்ரீ நம்மாண்டவன் என்கிற ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் கூடயிருந்து நடத்திவிட்டு உடனே ராயம்பேட்டை, வெண்ணாற்றங்கரை மார்க்கமாய் மன்னார் கோவிலுக்கு எழுந்தருளி அங்கு ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸ்ரீராஜ கோபாலனை ஸேவித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கையில் அந்தப் பக்கம்

விளக்குடி, சாக்கை, எம்பளச்சேரி, காடந்துருத்தி, கரியா பட்டணம் இவைகளிலுள்ள எல்லா ஆண்டவன் திருவடிகளும் இவர்ஸாக்ஷாத் ஸ்வாமி வழுத்தூர் ஸ்வாமி இவாள் போன்ற வைபவமுள்ளவர். வழுத்தூர் ஸ்வாமிக்கு ஆவணி பூரட்டாதி திருநக்ஷத்திரம், வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி என்னும் அந்த திருநாமமே இவருக்கும் ஏற்றது. இன்னும் இவர் உடையவரைப் போல் எல்லா தேசங்களுக்கும் எழுந்தருளி தேசிக ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசன ப்ரவசனம் ததுத்ஸவாதிகளைச் செய்தருளி வைக்கவும் பாக்யம் அடையப் போகிறார். ஆதலால் இவருக்கு இந்தத் திருநாமம் ஏற்ற தென்று எல்லோரும் வியந்து கொண்டாடினர்.

இவர் உபயகலையாருடையவும், சகலருடையவும் அபிமானத்தையும் மதிப்பையும் பெற்று எல்லாராலும் நம் ஆண்டவன் என்றே பேசப்பட்டார். ஆஸ்ரயித்த அநேகம் சிஷ்யர்களுக்கு ஸமாச்ரயணம் சரணாகதிகளைச் செய்து வைத்தும் கோபாலன் உத்ஸவம் முடிந்ததும் உடனே வடுவூருக்கு எழுந்தருளி அங்கு நடந்த சக்ரவர்த்தித் திருமகன் ப்ரஹ்மோத்ஸவத்தில் பெருமாளை ஸேவித்துக் கொண்டும் அங்கு எழுந்தருளின சிஷ்யர்களுக்கும் ஸமாச்ரயண சரணாகதிகளைச் செய்து கொண்டும் அவர்கள் ஸமர்ப்பித்த த்ரவ்யங்களைக் கொண்டு பெருமாள் தேசிகனுக்கு வெள்ளிவட்டில்கள், வெள்ளித் தாம்பாளங்கள், பெருமாளுக்குத் தங்க அரைஞாண், தங்கச் சங்கிலி, தங்கத்துரகல் இவைகளைப் பண்ணி ஸமர்ப்பித்து விட்டு அங்கு சில காலம் எழுந்தருளியிருந்துவிட்டுப் பிறகு திருக்குடந்தை ஏளி, அங்கு

ஒரு சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தைச் செய்துவிட்டு, சுமார் 10 மாத காலம்வரை இருந்து கொண்டு தேசிகன் உத்ஸவம், ஆராவமுதன் ப்ரஹ்மோத்ஸவம், ஸங்க்ரமணோத்ஸவம் இவைகளை எல்லாம் ஸேவித்துவிட்டு அங்குள்ளவர்களுக்கு காலக்ஷேபம், சரணாகதி, ஸமாச்ரயணம் முதலியவைகளை செய்து வைத்தும், வழுத்தூர் ஸ்வாமி அவதரித்த ஸ்ரீ க்ராமத்துக்கு எழுந்தருளி அவரால் மங்களாஸாஸனம் செய்யப்பட்ட பெருமாளை ஸேவித்துக் கொண்டும் அங்கு திருப்பதி ஸ்வாமியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நிகமாந்த மஹாதேஶிகனுக்கும் மாஸம் பாஷ்யகாரருக்கும் சாய்வதமாய் மாத வருஷ திருநக்ஷத்ரங்கள் நடத்தும்படி ஒரு சிஷ்யர் மூலமாகப் பூமியை ஏற்படுத்தியும் இன்னும் பூர்வாசார்யருக்கெல்லாம் ப்ரதி ஸாய்வதமாய் திருநக்ஷத்ரம் செய்யும்படி நியமித்தருளினார். அந்தத் திருநக்ஷத்ரங்கள் இப்பொழுதும் நடந்து வருகிறன. அதனால் அங்குள்ளவாள் விசேஷ வைபவமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அங்குள்ளவர்களுக்குக் காலக்ஷேபம் ஸமாச்ரயணம், சரணாகதி செய்து வைத்து இரண்டு மாதம் எழுந்தருளியிருந்து பிறகு ராயம்பேட்டைக்கு எழுந்தருளி இரண்டு மாதமும் திட்டாணி வட்டம் க்ராமத்தில் இரண்டு மாதமும் நாகைப்பட்டணம் ஸமீபமுள்ள பாப்பா கோவிலில் இரண்டு மாதமும் எழுந்தருளியிருந்து கொண்டு அங்கு பெரியாண்டவன், சின்னாண்டவன், ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவன் ஆண்டவன் இவர்களின் கைங்கர்ய திருநக்ஷத்ரங்களை நாலாயிரத் திவ்ய ப்ரபந்த ஸேவை, அசீதி வேத பாராயணம் க்ரந்த பாராயணங்களுடன் விசேஷ ததீயராதனத்துடனும் செய்தருளியாயிற்று. இதே மாதிரி ஆண்டவன் ஜீவதசையில்

எழுந்தருளியிருந்த வரையில் பூர்வாசார்யாளுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸங்கள் நடத்தப்பட்டன.

இதற்கிடையில் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் 38 ஆம் பட்டம் அஹோபில மடத்து ஸ்வாமி ஸ்ரீநிவாஸ ஶடகோப யதிந்த்ர மஹாதேசிகன் (ஸ்ரீ தேரழுந்தூர் அழகிய சிங்கர்) திருநாட்டை அலங்கரிக்கவே அந்த ஸ்தானத்துக்கு ஸ்வாமி நியமித்தருளின மன்னார் கோவில் வ்யாகரணம் ரங்காச்சார் ஸ்வாமிக்கு, நரஸிம்ஹபுரத்துக்கு எழுந்தருளச் செய்து,ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் ப்ரேஷ மந்த்ரம் உபதேசம் செய்து ஸந்நியாஸம் செய்தருளிவைத்தார். இந்த ஸ்வாமி அஹோபிலமடத்தின் 39 ஆம் பட்டம் மன்னார்குடி அழகியசிங்கர். ஸ்ரீமத் தேரழுந்தூர் அழகிய சிங்கர் தமக்கு அடுத்து பட்டத்துக்கு வரும் ஸ்வாமி ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனிடம்தான் ஸந்யாஸம் ஸ்வீகரிக்க வேண்டும் என உயில் ராஸனம் எழுதி முத்திரையிட்டு வைத்திருந்தார் என ஸ்ரீமைஸூர் ஆண்டவன் கன்னடத்தில் சாதித்துள்ள முனித்ரய ஆசார்ய பரம்பரா ப்ரபாவம் எனும் க்ரந்தத்தில் சாதித்துள்ளார். ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனின் திருவுள்ளப்படியே ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயமும் ஓங்கி வளர்ந்து வருகிறது.இந்த ஆண்டவன் ஸம்ப்ரதாயமும் நன்றாக வளர்ந்து வருகிறது.

ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் திம்மகுடி சாங்காத்யாயி ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர் (ஸ்ரீ ராமானுஜ யதீஸ்வரர்), திருக்குடந்தை வைராக்ய சேவதி ராஜகோபாலாசார்யர்(ஸ்ரீ நாராயண யதி), ராயம் பேட்டை கனபாடி சிம்ஹாசார்யர்( ஸ்ரீநிவாச ராமானுஜ

மஹாதேசிகன்) முதலானவர்களுக்கும் சன்யாசம் அனுக்ரஹித்தார்.

பிறகு பாப்பா கோவிலிலிருந்து நேராக ஸோஸலை யஜமானர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு மைசூர் ஸமஸ்தானம் எழுந்தருளி ஸோஸலை க்ராமத்தில் 4 மாத காலம் வரை எழுந்தருளியிருந்து அங்குள்ளவர்களுக்குக் காலக்ஷேப ஸமாச்ரயண, சரணாகதி இவைகளைச் செய்து வைத்து அவர்களைக் க்ருதார்த்தர்களாக்க அவ்விடமிருந்து நேராகத் திருப்பதி மார்க்கமாகப் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி அங்கும் அதன் பக்கத்திலுள்ள க்ராமங்களிலும் இருந்து கொண்டிருந்து, அவர்களுக்கு ஸமாச்ரயணம் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம், சரணாகதி இவைகளைச் செய்து வைத்தும் இரண்டு வருஷம் தூப்புல் தேசிகனுக்கு சோளதேச சிஷ்யர்களிடமிருந்து பதினாயிரம் ரூபாய்க்குமேல் பணம் வசூலித்து வெகு விமர்சையாக தினந்தோறும் 500 தீவர்த்திகள், 500 மத்தாப்புக்கள் வாணங்கள் வேடிக்கைள்.
மன்னார்கோவிலுள்ள நாதஸ்வரகாரரின் வாத்தியத்தோடும் தூப்புல் தேசிகன் ஸந்நிதியில் சுமார் 4,000 ஸ்வாமிகளுக்குக் குறையாமல் விசேஷ ததீயாராதனமும் நடத்தி உத்ஸவத்தை விசேஷமாகச் செய்வித்தருளினார். தேவப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவத்தில் ஒவ்வொரு நாளும் காலையிலும் ராத்ரியிலும் பெருமாள் வெளியே ஏளி, உள்ளே எழுந்தருளினதும் கற்கண்டு எலுமிச்சம்பழம் சேர்த்த பானகம் கண்டருளச் செய்தாகும். வரதன் ஸந்நிதியில் விசேஷ உத்ஸவ காலங்களிலும் திருநக்ஷத்ரம் சரணாகதி செய்விக்கும்

காலங்களிலும் விசேஷ சித்ரான்னங்களும், தோசை, வடை, இட்டிலி இவைகளை யதேஷ்டமாகச் செய்வித்தருளி பாகவதாளுக்கு ஸமர்ப்பித்தாகும். தேவப்பெருமாள் ஸந்நிதியில் சின்னப் பக்கிரி என்னும் சாலைக்கிணறு, வெள்ளைக்குளம் இவைகளிலிருந்து திருவாராதனத்துக்குத் திவ்ய பரிமள கந்தங்களுடன் இரண்டு காலமும் தீர்த்த கைங்கர்யமும் செய்வித்தாச்சுது. அதற்கு முதல் வைத்து அந்தக் கைங்கர்யமும் இன்னும் நடந்துவருகிறது.

பிறகு திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளி அங்கு இரண்டு மூன்று வருஷ காலங்கள் வரையில் எழுந்தருளியிருந்து கொண்டு அங்குள்ளவர்களுக்கு க்ரந்த சதுஷ்டய காலக்ஷேப ஸமாச்ரயண சரணாகதி இவைகளைச் செய்துவைத்துக் கொண்டு தேசிகன் உத்வஸவத்தில் வேத பாராயண ஸ்வாமிகளுக்கு இரண்டு காலம் சந்தன புஷ்பமாலைகள் ஸமர்ப்பித்தும் தேசிகனுக்கு ப்ரதி வருஷமும் சாத்து முறையில் புஷ்பப் பல்லக்கு நடத்தியும், அந்தக் கைங்கர்யமும் நித்யானுஸந்தான காலத்தில் தோசை,சுண்டல் கைங்கர்யம் செய்யும்படி நடத்தி அது நித்தியமாக நடத்த முதலும் செய்வித்தாகியிருக்கிறது. இங்குள்ள தேசிகன் திருமாளிகையில் ப்ரபல சிஷ்யரான கடம்பங்குடி ஸ்ரீநிவாஸய்யங்காரைக் கொண்டு ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேல் ஜீர்ணோத்தாரணம் செய்துவைத்தாச்சு.

அங்கிருந்து திருசித்ரகூட மார்க்கமாய் எழுந்தருளி நவதிருப்பதி முதலிய திவ்ய க்ஷேத்ரங்களை ஸேவித்துக் கொண்டு

திருக்குடந்தை மார்க்கமாக மன்னார்கோவில் எழுந்தருளி அங்கு 4,5 வருஷங்கள் எழுந்தருளியிருந்து கோபாலனுக்கு அநேக கைங்கர்யங்கள் செய்து கொண்டும் பூர்வாசார்யாள் திருநக்ஷத்ரங்களை விசேஷமாக வேத பாராயணாதிகளுடன் கொண்டாடிக் கொண்டும் எழுந்தருளியாச்சு. இந்தப்படி வடுவூரிலும் இரண்டு வருஷ காலம் எழுந்தருளியாயிருந்தது.எந்த கைங்கர்யத்திலும் கைங்கர்யபராளுக்கு ஸம்மானம் செய்வதில்லை. அவர்கள் ஆஸ்தையாகச் செய்வார்கள்.

வடுவூரிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளியாச்சு. பெரியாச்ரமத்தில் எழுந்தருளியிருந்து கொண்டு 15-20 பையன்களுக்கும் சில பெரியவர்களுக்கும் பாதுகாஸஹஸ்ரம், பஞ்சஸ்தவம், ரஹஸ்யாதி க்ரந்த சதுஷ்டயம், ஶததூஷணி, தத்வமுக்தாகலாபம் இவைகளைக் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு ஏற்கனவே திருக்குடந்தை (காடந்தேத்தி) ஆண்டவனால் ஆச்ரம நிர்வாஹத்துக்காக வாங்கப்பட்டிருந்த க்ராமத்திலிருந்து நெல் முதலியவைகளைத் தருவித்து ஆச்ரம நிர்வாஹத்தை நடத்தியாச்சு. மறுபடி திருவணை யாத்திரையாகத் திருக்குடந்தைக்கு எழுந்தருளி கொஞ்ச காலமிருந்து காலக்ஷேபம் சரணாகதி முதலியது செய்வித்தும் அமுதனுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் செலவில் வெள்ளித் தோளிக்கினியான் ஒன்றை ஏளப்பண்ணத் தண்டி, பட்டு கயிறு இவைகளை ஸமர்ப்பித்தும் ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் பெருமாளுக்கு ஸ்வர்ண கவசம் செய்து ஸமர்ப்பித்தும் வடுவூர் சக்ரவர்த்தித் திருமகனுக்கு வருஷா வரும்போல்

கவசம் சாத்த சந்தனக் காப்பு, பட்டு ஸூத்ரம், முதலியவைகளை நேரே ஸமர்ப்பித்துவிட்டும் திருவணை, ஆழ்வார் திருநகரி, நவதிருப்பதி,வானமாமலை முதலியவைகளுக்கு எழுந்தருளி ஆங்காங்கு கீழ்நத்தம், கோபால ஸமுத்ரம் முதலிய ஸ்ரீ க்ராமங்களில் ஏளி அங்குள்ளவாளுக்குக் காலக்ஷேபம், ஸமாச்ரயணம் இவைகளைச் செய்து வைத்துக் கொண்டு புதுக்கோட்டை மார்க்கமாக ஸ்ரீரங்கம் எழுந்தருளியாயிற்று.

## ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனின் கல்யாண குணங்கள்

புதுக்கோட்டையில் திவான் க்ருஷ்ணமாச்சார் ஸ்வாமி என்பவர் ரொம்பவும் புத்திசாலி. ரொம்பப் படித்தவர். அவ்வூரில் நடக்கும் வித்வத் ஸதஸ்ஸில் பல வித்வான்களிடம் பல மத சாஸ்த்ர விஷயங்கள் கேட்பவர்.மத விஷயங்களில் அவர் ஸ்ரீமத் ஆண்டவனிடம் வந்து கேட்கும் கேள்விக்கு ஸரஸமாயும் த்ருப்திகரமாயும் பதில் அருளிச் செய்தாகும். அவர் (ஏகமேவ அத்விதீயம்) ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். இரண்டு இல்லையே. நேஹ நாநாஸ்தி பற்றி ஒரு கேள்வி கேட்டார். அதற்குக் கொஞ்ச காலம் தாமதித்து அவரைப் பார்த்து இங்கு ஒருவருமில்லையே என்று கேட்டாயிற்று. அவர் இல்லையென்றார். அதோ எல்லோரும் இருக்கிறாளே. இல்லை என்றால் எப்படி? நம்மடவாள் தவிர வேறு இல்லை என்றார். ப்ரஹ்மம், ஜீவன், ப்ரக்ருதி எல்லாம் வெவ்வேறு. இவைகளெல்லாம் அவனுக்கு ஶரீரம் ! அவன் ஶரீரி, சப்தத்தால் கொத்தமல்லிக் காரியையோ, பால்காரனையோ

அதுள்ளவனை, ஏ கொத்தமல்லி, ஏ பால் என்ற கூப்பிடுவதுபோல் ஏதத் விசிஷ்டம் ப்ரஹ்மம் என்று ஏற்படுகிறது. இதில்லாத அவசிஷ்டமாய், பின்னமான ஒரு வஸ்துவும் கிடையாது. அதனால் ஸர்வம் ப்ரஹ்மம் என்றும் ஸர்வ சப்தவாச்யனென்றும் சொல்லுகிறோ மென்பதாக ஸாதித்தார்.

உடனேயே அவர்சரணாகதிக்குப் ப்ரார்த்தித்துச் சரணாகதி செய்து கொண்டார்.

இன்னொரு இடத்தில் ஒரு வக்கீல் எனக்கு அர்த்தம் தெரியாமல் ஸந்தியா வந்தனம் முதலியவற்றைச் செய்ய இஷ்டமில்லை அதனால் நான் செய்கிறதில்லை என்றார். அதற்கு நீ வக்கீலல்லவா? உன்னிடம் வரும் கக்ஷிக்காரர்களெல்லாம் படித்தவாளா? படிக்காத கீரல்காரப் பேர்வழிகள் எத்தனை பேர்? நீர் எழுதும் ப்ராதுக்கும் ஸ்டேட்மெண்டுக்கும் படித்து அர்த்தம் தெரிந்துகொள்ளாமலே உம்மை நம்பிக் கொடுக்கவில்லையா? நீயும் கோர்ட்டில் கொடுத்துத் தீர்ப்பு வாங்கிக் கொடுக்கவில்லையா என்று சொன்னதை அவர் கேட்டதும் ரொம்பவும் திருப்தரானார்.

இன்னொரு ஸமயம் இன்னொரு இடத்தில் ரிடையர்ட் டிப்டிகலெக்டர், வைஷ்ணவ மதம் ரொம்பக் குறுகியது. சிவன் கோவில் முதலிய இடங்களுக்கு போகக் கூடாது. மற்ற மதப் ப்ராஹ்மணாள் எங்களை தொடக் கூடாது. நாங்கள் சாப்பிடுவதைப் பார்க்கக் கூடாது. தொடக் கூடாது.

வேதமிருக்கத் திருவாய்மொழி என்று ஒன்றைக் கோவில்களிலும் ஆத்திலும் சொல்லிக் கொண்டு புளியோதரை செய்து சாப்பிட்டுக் கொண்டு, வரலக்ஷ்மிவிரதம் முதலிய விரதங்களை எல்லாம் விட்டுவிட்டு ஏதோ ஏமாற்றி வருகிறார்கள் என்றார் அதற்கு அவரைப் பார்த்து, இந்த ஊரில் உனக்கு யாராவது ஸ்நேஹிதாள் இருக்கிறார்களா? நீர் அவர் வீட்டில் அவர் ஸம்ஸாரம் முதலியவர் இல்லாமல் தளிகைப் பண்ணிக் கொண்டு கஷ்டப்பட்டும் சமயத்தில் உம் ஸம்ஸாரத்தை அவர் க்ருஹத்துக்கு அனுப்பி வைப்பீரா? அவர் ஏழையாயிருந்து அவர் ஸம்ஸாரம் புடவை முதலியது இல்லாமலிருந்தால் நீர் வாங்கக் கொடுப்பீரா? என்று ஸ்ரீமத் ஆண்டவன் கேட்டார். ஒருவருக்கு வாழ்க்கப்பட்டவள் இன்னொருவருக்கு எப்படிச் செய்யலாம்? புடவை முதலியதும் எப்படி வாங்கிக் கொடுக்கலாம்? அது நன்றாயிருக்காது, என்றார். அதற்கு இதுதான் எங்கள் மதம், எங்களுக்குத் தெய்வம் விஷ்ணு. அவர் எங்களுக்குப் புருஷர்போல், நாங்கள் அவருக்கு பத்னிகள் போல். நாங்கள் அவருக்குக் கார்யம் செய்யக் கடமைப் பட்டவாள். அவரும் நமக்கு எதையும் கொடுக்கக் கடமைப்பட்டவர். ஒருத்தன் பெண்டாட்டி இன்னொருத்தன் வீட்டுக்கே போகாததுபோலும் ஒருத்தனை ஒன்றும் கேட்காததுபோலும் நாங்கள் தேவதாந்தரம் கோவிலுக்குப் போகவும் மாட்டோம். ஒன்றும் கேட்கவும் மாட்டோம். உங்கள் மதப்படி - மத்தவாள் மித்யை. எங்கள் மதம் ஸத்யம். பழுதையை பார்த்துப் பாம்பு என்றோ தண்ணீர்க் கோடோ என்று ப்ரமித்தாலும் பழுதை என்பது தானே ஸத்யம். மற்றது பொய்தானே. உங்களுக்கு எல்லாம் பொய்யானதால் எங்கே போனால் என்ன? யாரை எது கேட்டால் என்ன? நீங்களும் பொய்,

கேட்பதும் பொய், உங்களுக்கு. எங்களுக்கு அப்படியல்ல. எல்லாம் ஸத்யம். உங்களுக்கு அந்த ஸ்நேஹிதர் வந்தால் உம் ஸம்சாரம் உம் சொல்படி அவருக்கு எல்லாம் செய்வளல்லவா? அதுபோல் எங்களுக்கு விஹிதமான கர்மங்களில் தேவதாந்தரங்களை ஆராதிக்கச் சொல்லியிருந்தால், அவர்கள் பெயருள்ள மந்த்ரங்களைச் சொலி ஆராதிப்போம். நித்யம் ஸந்த்யாவந்தனத்தில் இதர தெய்வமான ஸூர்யனை உபஸ்தானம் செய்யவோ, வருண தேவதாகமான மந்த்ரத்தைச் சொல்லி ஜலத்தை ப்ரோக்ஷிக்கவோ அக்னி தேவதாகமான மந்த்ரத்தைச் சொல்லி ஔபாஸனம் செய்யவோ; இவைகளைச் செய்வோம். மற்றவர்களிடம் கார்யம் ஒன்றுமில்லாததால் அவளிடம் போகமாட்டோம் ருத்ரன், த்ரையம்பகன் என்று பேர்கள் இருக்கிறதே என்றால் பாதகமில்லை. எல்லா வஸ்துக்களும் எங்கள் தெய்வத்தின் ஸ்வரூபம். அணுக்கு அணுவாயும் பெரியதுக்கு பெரியதாயும் இருக்கின்றது. எல்லா ாப்தங்களும் அவரையே சொல்லுகிறது. ராஜாவினுடைய ப்ரீதிக்காக அவன் உடம்பில் மேலுள்ள சட்டைமேல் மாலையைப் போட்டால் அவன் ப்ரீதிக்குத்தானே இருக்கிறது.

வ்யாஸர் - வால்மீகி முதலிய கதாசித் ராஜஸ தாமஸர்கள் போலில்லாமல் ஆழ்வார்கள் பகவானுடைய அம்ச பூதர்களாய் சுத்த ஸாத்விகர்களாய் பகவத் குணங்களில் ஆழ்ந்து தங்கள் பக்திக்குப் போக்கு வீடாகப் பாடிய பாடல்களுக்கு பகவத் விஷயமென்று பெயர். வேதம்போல் நித்தியமாயும் ப்ரமாணமாயுமுள்ளது. இன்னும் எங்கள் மதத்தில்

ப்ராஹ்மணன் முதல் பறையன் வரையில் எங்கள் மதத்தைத் தெரிந்து கொண்டு, எங்கள் மதத்தில் சொல்லுகிறபடி பக்தியோ சரணாகதியோ செய்து கொண்டால், அவனுக்கும் அந்த தேஹமுடிவில் மோக்ஷமுண்டு. இந்த மதம் எல்லாருக்கும் பொதுவாயுள்ளது. எல்லாவற்றிலும் அவன் இருப்பதால் எதுக்குத் தீங்கு செய்தாலும் அவனுக்குச் செய்ததாகும். ஆதலால் பூத தயை, அத்வேஷம் ஸௌஹார்தம் முதலியது சம்பாதிப்பது ஸுலபமாகும் என்று ஆண்டவன் அருளிச் செய்ய, அதைக் கேட்டு அவரும் ரொம்பவும் உங்கள் மதத்தில் அபசாரப்பட்டேன். க்ஷமிக்க வேணுமென்று சொன்னார்.

ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனுடைய ஆத்ம குணம் அபாரம். ஆத்ம குணம் கொஞ்ச நஞ்சமில்ல. அதைப் பற்றி சில விஷயங்கள் சொன்னால் இப்படிகூட ஒருத்தர் இருந்திருப்பாரா?என்று தோணும்.

ஒரு சமயம் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருந்தபோது ப்ரபத்தியைப் பற்றி வடகலையார்க்குள்ளேயே சில அநாவய்ய சர்ச்சை நீள்வதைக் கண்டு திருவுள்ளம் நொந்து சர்ச்சையைத் தீர்க்க சிறு புஸ்தகம் ஒன்று அச்சடிக்க வேண்டியிருந்தது. அச்சடிக்கக் கொடுத்த இடத்தில் வித்யாஸம் தெரியாத அச்சுக்கூடத்தார் தென்கலை திருமண் போட்டு அச்சடித்துவிட்டார்கள். ஸ்ரீமத் ஆண்டவனிடம் சிஷ்யர்கள்" மதுரையில் வேறு அச்சகத்தில் கொடுத்து மாற்றி அச்சு அடிக்கவேண்டும் " என்றார்கள். ஸ்ரீமத் ஆண்டவன்" மாற்றத் தேவையே இல்லை.இதுவே இருக்கட்டும். நம்மைப் போல் பெருமாள், தாயார், ஆண்டாள்,

ஆழ்வார், பாஷ்யகாரரை சேவிக்கறவாளுடைய திருமண் தானே இது. இருந்தால் தப்பென்ன?. பெருமாளை சேவிக்கற எந்த வைஷ்ணவனிடத்திலும் மாறான எண்ணம் கூடாது. வைஷ்ணவ த்வேஷம் பெருமாளுக்கு இஷ்டமாக இருக்குமா? மாற்றவேண்டாம்." என்று உத்தரவிட்டாயிற்றாம்.

ஸ்ரீமத் ஆண்டவன் வழுத்தூரில் ஒரு சிஷ்யரின் திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஆண்டவனுடைய திருத்தாயாரும் திருத் தகப்பனாரும் பெற்ற பாசத்தால் உந்தப்பட்டு ஸ்ரீமத் ஆண்டவனைப் பார்க்க வந்து வாசலில் நின்றுகொண்டு 'உள்ளே வரலாமா?'என்று சிஷ்யர்களைக் கேட்டு வரச் சொன்னார்கள். ஸ்ரீமத் ஆண்டவனும் மிகவும் தயங்கி, திருத்தாயாரை மட்டும் உள்ளே வரச் சொல்லியாயிற்று. திருத்தாயார் மட்டும் உள்ளே வந்தவுடன் ஸ்ரீமத் ஆண்டவன் திருத்தாயாரை ப்ரணாமம் பண்ணி ப்ரதக்ஷிணம் பண்ணி அஞ்ஜலி செய்து தம்மை இதுபோல் தர்ம சங்கடத்தில் இனி ஆழ்த்தவேண்டாம் என்று வேண்டிக் கொண்டார். திருத் தகப்பனாரைப் பார்க்கவே முடியாது என்று மறுத்துவிட்டார். சிஷ்யர்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் மறுத்து விட்டார். ஸாஸ்த்ர விருத்தம் என்று மறுத்து விட்டார்.

நாட்டேரி ப்ரம்ஹசாரி என்று ஒருவர் அவ்வப்போது ஆஸ்ரமத்திற்கு வந்து போவார். சற்றே ஜடத்தனமாக நடந்து கொள்வார். எங்கும் நடந்துதான் போவார் வருவார். ஸ்தூல சரீரம். ஸ்ரீமத் ஆண்டவனை வந்து தண்டம் சமர்ப்பித்தார். தண்டம் சமர்ப்பித்துக் கொண்டே இருந்தார்.ஸ்ரீமத்

ஆண்டவனும் எண்ணிகொண்டே இருந்தார். 30 ஆயிற்று. அந்த ப்ரம்ஹசாரியால் சேவிக்க முடியவில்லை. மூச்சு வாங்கியது.வேர்த்துக் கொட்டியது. ஏண்டா! முடியாமல் சேவித்துக் கொண்டே இருக்க ? என்றாயிற்று.

"ஆண்டவன் போதும் என்று சொல்லலையே? ஆண்டவன் போதும்னு சொன்னால்தானே நிறுத்தணும்?" என்றார் அந்த ப்ரம்ஹசாரி. அத்தனை விச்வாஸி.

ஒருநாள் ஆண்டவன் காலக்ஷேபம் சாதித்துக் கொண்டிருந்தபோது பக்கத்தில் விசிறிக் கொண்டு நின்றார் அந்த ப்ரம்ஹசாரி. வெகு நேரம் நின்று விசிறிக் கொண்டிருந்தார். ஏண்டா கை வலிக்கலையா ? கால் வலிக்கலையா? என்றாயிற்று ஸ்ரீமத் ஆண்டவன். வலிக்கிறது என்றார் அவர். வலித்தால் நிறுத்தவேண்டியதுதானே? என்றாயிற்று ஆண்டவன். "பெருமாள்தான் ஆண்டவன். ஆண்டவனுக்குத் தெரியாதா? வலிக்கிறது என்று. எனக்கு ஆண்டவனுக்கு எல்லாம் தெரியும். ஆண்டவனே "போதும் " சொல்லும்போதுதான் நிறுத்தணும் "என்றார். ஸ்ரீமத் ஆண்டவனுக்கு நெஞ்சு பதறி விட்டது.நீ உட்கார் என்று சொல்லி, தாமே கருணையுடன் அந்த ப்ரம்ஹசாரிக்கு விசிறி விட ஆரம்பித்தார்.பார்த்துக் கொண்டிருந்த சிஷ்யர்கள் பதறினார்கள். ப்ரம்ஹசாரியோ பேசாமல் உட்கார்ந்து காலை நீட்டிக்கொண்டு காற்று வாங்கி கொண்டிருந்தார். சிஷ்யர்கள் அவரிடம் "வேண்டாம் என்று ஆண்டவனிடம் சொல்லேன்" என்று பதறினார்கள். அவரோ "ஆண்டவன் பெருமாள்.

பெருமாள் செய்தால் நான் யார் வேண்டாம் என்று சொல்ல?" என்றார். அந்த சிஷ்யருக்கு கால் கை வலி போகும் வரை ஸ்ரீமத் ஆண்டவன் விசிறி விட்டாராம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாண்டி அருகே ஒரு ஒரு க்ராமத்துக்கு தேரழுந்தூர் ஆண்டவன் ஏள்ளினார். வழி குறுகலான பாதை. அதுல வழியை மறிச்சுண்டு குடிகாரன். வழியை விட வில்லை. ஒத்தை அடிப் பாதைதானே. அதில் இவர்களை மதிக்காம ல், வழியை விடாமல் அவன் ஆண்டாள் கோபுரத்தைப் பார்த்து சொல்கிறான். நான் உன்னைத்தானே நம்பினேன்; என்னை கைவிட்டுட்டியே ? நான் உன்னைத்தானே நம்பினேன் ன்னு. திருப்பித் திருப்பி அதையே சொல்கிறான் அந்த குடிகாரன். அதை கேட்டுவிட்டுத் தேரழுந்தூர் ஆண்டவன் அழுதாராம். டேய் ! குடியில என்ன வார்த்தை சொல்றான் பார்த்தயாடா! அவன் குடிச்சாவிட்டு என்ன வார்த்தை சொல்றான்! நாம் நன்னா இருக்கச்சே இந்த வார்த்தையை சொல்லலயேடா! என்றாராம். ஏதோ கஷ்டம் அவனுக்கு. அவன் சொல்றான். உன்னைத்தானே நம்பினேன் ன்னு ஆண்டாள் கோபுரத்தைப் பார்த்து அழறான். அவன் குடிச்சுட்டு இந்த வார்த்தையை சொல்றான். நாம் நன்னா இருக்கச்சே இந்த வார்த்தையை சொல்லத் தெரியலயேடா! ன்னாராம்.

தேரழுந்தூர் ஆண்டவன் யாரையும் ஒருவார்த்தையும் தப்பாகப் பேசியாகாதாம். அவ்வளவு சுத்தாத்மா. தேரழுந்தூர் ஆண்டவனை தப்பு சொன்னவா ஒருத்தருமே கிடையாதாம். அப்பேற்பட்ட மஹான். எத்தனையோபேர் தென்னாசார்ய சம்ப்ரதாயத்துல வடகலையாரை வெய்வார்கள். இவாளும்

அவாளை வெய்வா. அதில் சில ந்யாயமாக இருக்கும்.சில அந்யாயமாகவும் இருக்கும். எல்லாம் உண்டு. அந்த காலத்தில் அதிகம். ஆனா தேரழுந்தூர் ஆண்டவனை வெய்தவர்கள் ஒருத்தருமே கிடையாது. அவ்வளவு ஒரு புண்யாத்மா. ஒருவருமே வெய்தது கிடையாது.

நம்மாண்டவன் பலமுறை சாதிப்பராம். 'அப்பா! ஆண்டாள் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று சொன்னாளே தவிர, உனக்கு நாமே ஆட்செய்வோம் என்று சொல்லவில்லையே? ஆகையால் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் இந்த கைங்கர்யம் செய்யக்கூடாது, தேசிக சம்ப்ரதாயஸ்தர்கள்தான் செய்யலாம்;, தேசிக சம்ப்ரதாயஸ்தர்கள் செய்யக்கூடாது, தென்னாசார்ய சம்ப்ரதாயஸ்தர்கள்தான் செய்யலாம் என்று சொல்லவில்லையே. இருவரும் சமமாய் பழகவேண்டும்' என்று.

ஒரு சமயம் தேரழுந்தூர் ஆண்டவன் கும்பகோணத்தில் எழுந்தருளி யிருந்தாச்சு. லைன் கரையோரம் போனால் ஆட்டு குட்டி சாமியார் மடத்தின் எதிர்த் தோப்பில் (ராஜம் தோப்பு என்பர்) ப்ரத்யேக பர்ணசாலையில் இருப்பு. பச்சையப்பன் தெரு வழியாக அமுதன் சன்னிதிக்கு எழுந்தருளியாகுமாம். அந்த பச்சையப்பன் தெருவில ஆண்டவன் சிஷ்யர் ஒருத்தர். அவர் பெரிய வக்கீல். அவர் ரொம்ப ஆஸ்திகர். அவர் பிள்ளை பரம நாஸ்திகன். நாஸ்திகன் என்றால் எவ்வளவு? -ஆண்டவன் என்றால் என்ன ஆண்டவன்? என்று கேட்பான். அவன் அப்பா வந்து அழுதாராம் ஆண்டவனிடம் எனக்கு இப்படி ஒரு

பிள்ளை. உம்மை பத்தி பேசினாலே அவனுக்குப் பிடிக்கவில்லை. நான் என்ன பண்ணுவேன் ? என்று.என் வயத்துல இப்படியொரு பிள்ளை பொறந்துடுத்தே ? அப்படீன்னு அழுவார். தேரழுந்தூர் ஆண்டவன் - நீ ஒன்னும் கவலைப் படாதே ன்னார். ஆண்டவன் அந்த வக்கீல் அகத்து வாசல் வழியா கோவிலுக்குப் போகச்சே அவரகத்து வாசலில் போய் நின்றுகொண்டு அந்த வக்கீலைப் பார்த்து உம் பையனை கூப்பிடும்னாராம். அந்த பையனா ஹூம் எட்டியே பார்க்க வில்லை. வரமாட்டேன் என்கிறான். நான் எதுக்கு வரணும்? என்கிறான். வக்கீலோ பிள்ளையை கெஞ்சறார். டேய்! வாடா! ஆண்டவன் கூப்படறார்டா. நீ வரலன்னா அவரே ஆத்துக்குள்ள ஏள்ளிடுவார்டா!ன்றார். அந்த பையன் இஷ்டமே இல்லாம வந்து நிற்கிறான் கையை பின்னால் கட்டிண்டு. ஆண்டவன் பாக்கறார். ஃபாரின் ஸூட். ஆண்டவன் கடாக்ஷிச்சு லேசா சிரிச்சுட்டு, நீ ரொம்ப ஃபாரின் டைப்ல இருக்கயே! மேல் நாட்டு வழக்கம் ஒண்ணு தெரியுமோல்லியோ ? ஒருத்தர் நம்மை வந்து விசிட் பண்ணி விஷ் பண்ணா நீயும் ரெசிப்ரோகலா வந்து விஷ் பண்ணணுமோல்லியோ? என்னை வந்து நீ நாளைக்கு ஆச்ரமத்துல விஷ் பண்ணு!ன்னு சாதிச்சுட்டு போய் விட்டாராம். இவனுக்கு ஒரே மண்டை குடைச்சல். இப்படி சொல்லிவிட்டுப் போயிட்டாரே. இவ்வளவு பெரிய ஸ்வாமியா இருக்காரே! தேஜஸ்வியா இருக்காரே! இருந்தாலும் நாளைக்கு போறதா?வேண்டாமா? அப்பா வேற சொல்லிண்டே இருக்கார்- ஆண்டவன் கூப்பிட்டுட்டார். போகணும் டா ! போகணும் டான்னு. இவனுக்கு போவதா வேண்டாமா என்று தெரியலை. என்ன பண்ணானாம்!. ஆத்து பேக்கடையில் வந்து உட்கார்ந்தானாம். இந்த தென்னை மரத்துலேர்ந்து தேங்காய்

இப்ப விழுந்ததானால் போவது, இல்லை என்றால் போவதில்லை என்று தென்னை மரத்தைப் பார்த்தான். இரண்டு தேங்காய் விழுந்ததாம்.விழுந்தவுடனே -அடடா ! இப்படி ரெண்டு தேங்காய் விழுந்ததே. சரி! நாம் நினைச்சதை செய்வோம். தேங்காய் விழுந்தால் போகலாம்னு நினைச்சோம். சரி போகலாம்னு.

மறுநாள் ஆச்ரமத்துக்கு தேரழுந்தூர் ஆண்டவனை சேவிக்க வந்தான். எப்படி வந்தான்?னா, நேற்று இருந்த அந்த ஃபாரின் உடை எதுவுமே இல்ல. சிகை வைத்துக்கொண்டு பன்னிரண்டு திருமண் இட்டுக் கொண்டு கச்சத்தை உடுத்திக்கொண்டு வந்துவிட்டான். ஆண்டவன் பார்த்தார். யாரப்பா? நீ, புதுசா இருக்கே?ன்னாச்சு. நேத்து ஆண்டவன் வரச் சொன்னதனால் வந்தேன் என்றான் அவன். எல்லாருக்கும் தூக்கிப் போட்டது. ஆண்டவனுடைய கண் பார்வை மாற்றிவிட்டது. ஆண்டவன் கேட்டாச்சாம். ஏன் டா? ஃபாரின் ஸ்டார் மாதிரி இருந்தயேடா! ஒரு நாளில் உன்னை மாத்திண்டு வா!ன்னா சொன்னேன் என்றாயிற்று.

..அவன் ஆண்டவன் கூப்பிட்டாவிட்டு ஆண்டவன் கிட்ட எப்படி வரணுமோ அப்படித்தானே வரணும்!' என்றான்.

ஆண்டவன் சாதிச்சாச்சு - நீ அப்படி வரலையே ? பன்னிரண்டு திருமண் இட்டுண்டு இருக்க? தொப்பையில நாலு திருமண் இட்டுண்டு இருக்க. கழுத்துல நாலு திருமண் இட்டுண்டு இருக்க?

பன்னிரண்டு திருமண் வேற எப்படி இட்டுக்கறது? என்று கேழ்க்கறான் அவன். நெத்தியில ஒண்ணு. கழுத்துல நாலு. வயத்துல நாலு மார்பில ஒண்ணு. ரெண்டு கையில ரெண்டு. சரிதானே? ன்னான்.

ஆண்டவன் சாதிச்சாச்சு. உனக்கு இன்னும் சமாச்ரயணமே ஆகலை.அதுக்குள்ள உன்னை யார் பன்னிரண்டு திருமண் இட்டுண்டு வரச்சொன்னா.? நாளைக்கு வா! ஸமாஸ்ரயணம் பண்ணிவெக்கறேன். நான் சரியா திருமண் இட்டு விடறேன் என்றாச்சு. அவனும் ஸமாஸ்ரயணம் செய்து கொண்டான். அவ்வளவு க்ருபை ஸ்ரீமத் ஆண்டவனுக்கு. க்ருபா கடாக்ஷத்தினாலேயே திருத்திடுவார். அந்தபையன் அப்புறம் அவன் அப்பா மாதிரியே மாறி விட்டானாம்.

ஒரு சிஷ்யர் நிறைய பழவர்கங்கள் வஸ்துக்கள் த்ரவ்யம் வைத்து ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனை சேவித்தாயிற்று. ஸ்ரீமத் ஆண்டவன் அவரை கேட்டாயிற்று. உன் பக்கத்தாத்துக்காரரிடம் சண்டையாமே. கோர்ட்டில் கேஸ் நடக்கிறதாமே? என்று. அவரும் தம் வ்யாஜ்யத்தைப் பற்றிச் சொன்னார். அதெல்லாம் வேண்டாம். நீ சமர்பித்த இதெல்லாம் எனக்கு சம்பாவனை இல்லை. இதெல்லாம் எனக்கு வேண்டாம். உன் பக்கத்தாத்து மனுஷ்யரும் வைஷ்ணவர்தானே. வைஷ்ணவரோடு சண்டை போடலாமா? அடுத்தமுறை வரும்போது உனக்கும் அவருக்கும் ராஜியாய் விட்டது. கேஸ் திரும்பி வாங்கியாச்சு என்று சொல்லவேண்டும். அதுதான் நான் உன்னிடம் எதிர்ப்பார்க்கும்

உண்மையான சம்பாவனை. சரியா ? என்று சொல்லியாயிற்று. அவரும் அதேபோல் அடுத்தாத்துக்கார ரிடம் மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்து, சமாதானத்துக்கு வர மறுத்த அவரை சமாதானப் படுத்தி, கேஸை ராஜி செய்து கொண்டு, ஆண்டவனிடமும் வந்து சமாதானம் ஆகிவிட்டது என்று விஜ்ஞாபித்தார். இதுதான் எனக்கு வேண்டிய சம்பாவனை என்றார் ஆண்டவன்.

அரசு அதிகாரியாய் இருந்த ஒரு வைஷ்ணவர் ஸ்ரீமத் ஆண்டவனை சேவிக்க வந்தார். அவருடைய சிப்பந்தி ஏராளமான பழக்கூடைகள் முந்திரி முதலான பருப்பு வகைகள் கறிகாய் வகைகள் எல்லாம் தூக்கிக் கொண்டுவந்து வைத்தார். அந்த அதிகாரி பெருமையுடன் கைகூப்பினார். சேவித்தார். சிஷ்யர்கள் அவரை ஆச்சர்யமாகப் பார்த்தனர். ஸ்ரீமத் ஆண்டவன் "இதெல்லாம் எதற்கு? எடுத்துக் கொண்டு போ! உன் ஆஃபீசில் உன் மேலதிகாரிக்கு மாலை போடுவதானால் சிப்பந்தியை விட்டுத்தான் போடுவாயா? காஷாயம் உடுத்தினவன் என்பதால் மட்டமா? உன் பெருமையை காட்டத்தானே இதெல்லாம். போ!போ!" என்று அலக்ஷியப் படுத்தினார். அவர் அதிர்ந்து போனார். பேசாமல் நின்றார். கண்களில் நீர் முட்டி வழிந்தது.

ஸ்ரீமத் ஆண்டவன் "ஒரு சன்யாசி என்னை அலக்ஷியப் படுத்தி விட்டானே என்று தானே அழுகிறாய்? எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போ!" என்று கண்டிப்பாய் சொல்லியாயிற்று.

இரண்டு மாதங்கள் கழித்து அதே வ்யக்தி பரம பவ்யமாக வந்து பலமுறை தண்டம் சமர்ப்பித்து பேசாமல் நின்று கொண்டு கண்ணீர் விட்டார். ஸ்ரீமத் ஆண்டவன் அவரிடம் அப்பா! இதுதான் எனக்கு வேண்டும். அன்று உன் பெருமையைக் காட்டிகொண்டு வந்தாய். ஒரு சன்யாசி எத்தனை கவுரமான என்னை அலக்ஷியப் படுத்தி விட்டானே என்று குமுறி அழுது போய்விட்டாய். நீ அப்படியே இங்கு வராமல் போயிருந்தால் உனக்கு ரொம்ப நஷ்டம். இன்று உன் தப்பைத் தெரிந்து கொண்டு வந்து உணர்ந்து அழுகிறாய். நல்ல வேளை நீ மீண்டும் வந்தாயே. எனக்கு ரொம்ப சந்தோஷம். ஒரு ஆத்மாவும் கர்வப்படக்கூடாது. ஆசார்யாளிடம் பரிபூர்ண விச்வாஸம்தான் வேணும். அதுவே எல்லா க்ஷேமமும். பாதுகைகள்தான் உனக்கு நல்லதைச் சொல்லி கொடுத்து இங்கு வரவழைத்திருக்கிறாள். க்ஷேமமாய் இரு" என்று தடுத்தாட்கொண்டாயிற்று.

தேரழுந்தூர் ஆண்டவனுடைய திவ்ய கடாக்ஷம் நிறைய பேரை மாற்றி இருக்கிறது. ஒருவர் ஆண்டவனிடம் காலக்ஷேபம் பண்ண வந்தார்.வந்தவர் 120 கேள்வி எடுத்துக்கொண்டு வந்தார்.120 கேள்வி. இதுக்கெல்லாம் பதில்வேணும் என்று. ஆண்டவன் சாதிச்சாச்சு. இவ்வளவு கேள்விகள் வேணாம். மூணு கேள்வி கேள். பதில் சொல்றேன் னாச்சாம். மூணு கேள்விக்கு பதில் சாதிச்சாச்சாம்.120 கேள்விக்கும் பதில் வந்துடுத்து 'என்று சொல்லிவிட்டுப் போனாராம் வந்தவர்.

தேரழுந்தூர் ஆண்டவன் ஞானத்தால் பழுத்த பழம். சுத்தாத்மா என்றால் அவ்வளவு சுத்தாத்மா. அவர் காப்பாற்றின ஸம்ப்ரதாயம் இது. எவ்வளவோ சம்ப்ரதாய கார்யங்கள் பண்ணியாச்சு.

ஒரு சமயம் தேரழுந்தூர் ஆண்டவன் வானமாமலைக்கு எழுந்தருளியாச்சாம். வானமாமலை மடம் பெரிய அந்தஸ்துள்ள மடம். 101 இடத்துல மடம் இருக்கு. நம் ஆச்ரமத்துக்கு அப்போது இரண்டோ மூன்றோதான். வானமாமலை மடம் பணக்கார மடமாச்சே! நம் ஆசார்யர் கொட்டாங்கச்சி ஸன்யாசி ! தேரழுந்தூர் ஆண்டவனை போய்ப் பார்க்கக் கூடாது என்று வானமாமலை ஜீயரை ஶிஷ்யாள் தடுத்துவிட்டார்கள். ஆனால் ஜீயருக்கோ தேரழுந்தூர் ஆண்டவனை பார்க்கவேண்டும் என ஆசை. எவ்வளவோ பெரிய மஹான் ! எத்தனை பெரிய சம்ப்ரதாயத்து ஆசார்யர்! அவரை பார்க்கவேண்டும் என்று ஜீயருக்கு ஆசை. வானமாமலை தெய்வநாயகனைத்தானே சேவிக்க வந்தார் ஆண்டவன். அதனால் தெய்வநாயகனை சேவிக்க எழுந்தருளியாச்சு ஸ்ரீமத் ஆண்டவன். அது ஜீயருடைய கோவிலாச்சே ! அவரும் பெருமாள் சேவிக்கப் போறேன் என்று சொல்லிவிட்டு அவரே வந்துவிட்டார், ஆண்டவன் கோவிலுக்கு எழுந்தருளும்போது.இரண்டு ஆசார்யர்களும் சன்னிதியில் சந்திச்சுண்டாச்சு. ஒருத்தருக்கொருத்தர் விஸ்வாஸமா பேசிண்டாச்சு.

வானமாமலை ஜீயர்" ஸ்வாமி! எப்ப எள்ளியாச்சு ? எள்ளணும்! அவசியம் நம்ம மடத்துக்கு எள்ளணும்!" என்று கையோட அழைத்துக்கொண்டு மடத்துக்கு போயாச்சு ஜீயர். மடத்துக்கு எள்ளின வுடனே, ஏதாவது இவ்விடத்துல பகவத் விஷயம் சாதிக்கணும். நம் தெய்வநாயகனைப் பத்தி ஏதாவது சாதிக்கணும் என்றார். எவ்வளவு நாழி சொல்லணும்? என்று தேரழுந்தூர் கேட்டாச்சு. ஜீயர் சிஷ்யாள் எல்லாம் று "அரை மணி போதும்" என்றார்களாம். சிஷ்யாள் அரை மணி போதும் என்றவுடனே, ஸ்ரீமத் ஆண்டவன் சரி அரை மணி சொல்றேன் என்று ஆரம்பிச்சாச்சு. உபன்யாசத்தைக் கேட்டு ஸ்தம்பிச்சு போய்விட்டார்கள். தேரழுந்தூர் ஆண்டவனுடைய பகவத் விஷயத்தை கேழ்க்கணுமா! தேவாம்ருதமாக இருக்கும் !பக்தாம்ருதம்னு திருவாய்மொழிக்கு பேர். அது அவர் திருவாக்கால்தான் அம்ருதமாக இருக்கும். ஸ்தம்பித்து போய்விட்டார்கள். அரை மணி நேரமாச்சு.
போதுமோல்லியோன்னு ஆண்டவன் கேட்டாச்சு. இல்ல, இன்னும் கொஞ்ச ம் சாதிக்கணும்னு சிஷ்யாள் சொல்றா என்றார் வானமாமலை ஸ்வாமி. மூணு மணி நேரம் சாதிச்சார் ஆண்டவன். மூணுமணி நேரம் சாதித்தால், அத்தனை சிஷ்யாளும், யார் யாரெல்லாம் ஆண்டவனை ஜீயர் போய் பார்க்கவே வேண்டாம் என்று சொன்னாளோ அத்தனை பேரும் பூர்ணமாகக் கேட்டு ஆனந்தப் பட்டாளாம். எல்லாருக்கும் விஷ்ணு பக்தி இருக்கிறது. எல்லாருக்கும் நம் சம்ப்ரதாயத்தில் ருசி இருக்கிறது. ஏதோ நடுவில் திருமண் கொஞ்சம் வித்யாசமா இருக்கு என்பதால் சின்ன வித்யாசம் இருக்கே ஒழிய பகவத் பக்தி, ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியில எல்லாரும் ஒன்றாகத்தானே கரைந்து போகிறோம். அத்தனை பேரும்

அப்படி தேரழுந்தூர் ஆண்டவனை வித்யாசமில்லாமல் அனுபவித்தார்கள். அப்படி தேரழுந்தூர் ஆண்டவன் ஒரு மஹான். பரம சாது.

தேரழுந்தூர் ஆண்டவனைவிட இன்னும் பரமசாது தென்பரை ஆண்டவன்.தேரழுந்தூர் ஆண்டவனுடைய காலக்ஷேபத்துல கடைசியில் கோஷ்டியில் ஒதுங்கி உட்கார்ந்திருப்பாராம். தேரழுந்தூர் ஆண்டவன் மன்னார்குடியில் ஏள்ளியிருந்து சிலகாலம் காலக்ஷேபம் சாதிச்சாச்சு. தென்பரை ஆண்டவன் பூர்வாஸ்ரமத்தில் காலக்ஷேபத்தில் அந்வயிச்சாச்சு. தேரழுந்தூர் ஆண்டவன் - ஏ சது: ஸாஸ்த்ர கல்பதோரோ ! ஏன் அங்கே போய் உட்கார்ந்த? ஒரு நாளைக்கு இந்த ஸ்தானத்துல உட்கார்ந்துப்ப அப்படீன்னாச்சு.

எப்படி கூப்பிட்டார் பாருங்கள் ! சது: ஸாஸ்த்ர கல்பதரோ! அங்கபோய் உட்கார்ந்திருக்கயே? ஒரு நாள் நீ இங்க வருவாய் என்று தம் திருக்கரத்தால் தம் ஆசனத்தைக் காட்டி சாதிச்சாச்சாம். எப்படி தீர்க்க தர்ானம் பாருங்கோள்!

திருக்குடந்தை ஆண்டவன் சாதித்தாயிற்று. எனக்கு சின்ன வயஸ்ஸுல நாலுபேரைப் பார்த்தா பேச வராது. கூச்சம். காலக்ஷேபத்துல சிஷ்யாள்லாம் தேரழுந்தூர் ஆண்டவனை ப்ரமாதமா கேள்வியெல்லாம் கேழ்ப்பா. உத்ஸாஹமா இருப்பா. தாங்கள்லாம் பெரிய வித்வானா ஆயிட்டா மாதிரி காட்டிப்பா. அதெல்லாம் காலக்ஷேபத்துல ஸஹஜமாக நடக்கும். அது இருந்தால் தான் காலக்ஷபம் களை கட்டும். நானோ காலக்ஷேபத்துல வாயே திறக்க மாட்டேன். என்னை

கடாக்ஷிச்சு தேரழுந்தூர் ஆண்டவன் சாதிப்பார். 'இவனுக்கு வாய் வரணுமே. வாய் வரணுமே ன்னு. அந்த அனுக்ரஹம்தான் இன்னிக்கு இந்த வாயைத் திறந்து பாரதம் பூராவும் பேசியாச்சு. ஒரு இடம் பாக்கி கிடையாது. அந்த அனுக்ரஹம்தான் என்ற திருக்கண்களில் கசிந்த நீர் வழிய சாதித்தாயிற்று திருக்குடந்தை ஆண்டவன். ,

தேரழுந்தூர் ஆண்டவன் ஆசார்யாளை உருவாக்கின ஆண்டவன். ஆச்ரம பரம்பரையில் அடுத்த நான்கு ஆண்டவன்களும் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனின் சிஷ்யர்களே.

நாச்சியார் கோவிலில் ஒருத்தர் இருந்தார். பரம நாஸ்திகர் அவர். வைஷ்ணவாளை வெய்வார். சன்யாசிகளை வெய்வார். அவர் தேரழுந்தூர் ஆண்டவனிடம் பரன்யாஸம் பண்ணிக்கொள்ள வந்தார். சிஷ்யாள் ஆண்டவனைத் தடுத்தார்களாம். இவர் நேற்று வரையிலும் என்னவெல்லாம் பேசியிருக்கார் தெரியுமோல்லியோ? நம் எல்லாரையும் வெய்வார். சரணாகதி பண்ணிண்டாவிட்டும் நம்மளை வெசிண்டுதான் இருப்பார். இவர்போய் இன்னிக்கு வந்திருக்கார். இவருக்கு எதுவும் பண்ணிவெக்கக் கூடாதுன்னு சிஷ்யாள் சொன்னா.

தேரழுந்தூர் ஆண்டவன் சாதிச்சாச்சு. ஏண்டா! அவன் நம்மை நம்பித்தானேடாவந்திருக்கான். இதுவரைக்கும்தானே தப்பா பேசினான். இனிமேலும் தப்பா பேசுவானா?. இந்த ஆச்ரமத்துல மூணு பேச்சுதான். திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமஸ்லோகம்.

இது சம்பந்தமானதுதான் இங்கே. இதுல ஏதாவது சொல்லியிருக்கா? இவனை கூடாதுன்னு சொல்லியிருக்கா. என்னை எதுக்கு பகவான் இந்த ஆச்ரமத்துல உட்கார்த்தி வெச்சிருக்கான் பகவான் ? சரணாகதி ன்னு கேட்டு வரவனுக்கு பண்ணி வெக்கறதுக்குத்தான் வெச்சிருக்கான். கூப்பிடு அவனை அப்படீன்னாச்சு. அன்றைக்கு ஏகாதசீ. ஆண்டவன் 'இன்னிக்கு ஏகாதசியாச்சே ? பூர்ணோபவாசமாச்சே. இவரோ மத்யானம் பன்னிரண்டு மணிக்கு மேல வந்து நிக்கறார் ' என்றனர் சிஷ்யர்கள். ஆண்டவன்" பரவாயில்ல. கூப்பிடு" என்றாராம். சரணாகதி பண்ணி வெச்சாச்சாம். "அவருக்கு பசிக்கும்டா.ஏதாவது கொடுடா. என்ன பண்ணி வெச்சிருக்க? உப்மாவாவது கொடுடா"ன்னாராம். உப்மாவும் ஜீராவும் இருக்குன்னாளாம். என்ன இருக்கோ பார்த்து கொடு என்றாராம் ஆண்டவன். ப்ரசாதத்தை சாப்பிட்டுவிட்டு போய் அகத்தில் த்ருப்தியாகப் படுத்தாராம். அஞ்சே நிமிஷத்துல அவர் அநாயாஸமாக பரமபதிச்சுட்டாராம். அதை கேட்டு அழுதாராம் ஸ்ரீமத் ஆண்டவன். 'நீங்கள் எல்லாம் சொன்னதைக் கேட்டு நான் சரணாகதி பண்ணி வைக்காமல் போயிருந்தால் என்ன

ஆயிருக்கும் ? அந்த ஆத்மா எங்க போய் விழுந்திருக்குமோ? யாருடா காப்பாத்தியிருக்க முடியும் ? என்னமோ ! பெருமாளும் பாதுகாதேவியும்தான் எனக்கு நல்ல புத்தி கொடுத்தாள். பாதுகாதேவிதான் நல்ல புத்தியைக் கொடுத்தாள்'னு அழுதாராம்.

பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனுக்கு அபார பக்தி. 1907 ல், அதாவது ஆஸ்ரம ஸ்வீகாரத்துக்கு

முன்பே பாதுகா ஸஹஸ்ரம் பூராவும் பூர்வாசார்ய வ்யாக்யானத்துடன் அச்சிட்டாயிற்று. ஆச்ரம ஸ்வீகாரத்துக்குப் பின்னும் தம் சொந்த வ்யாக்யானத்துடன் வெளியிட்டாயிற்று. எழுத முடியாமல் போன கடைசி நூற்றி சொச்சம் ஸ்லோகங்களுக்கு பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் எழுதிக் காட்டி அனுமதி பெற்று அச்சாயிற்று. தேரழுந்தூர் ஆண்டவன் பாதுகாராதனம் பண்ணும் போது திருத் திரைக்குப் பின்னால் பேச்சுக் குரல் கேழ்க்குமாம். யாரோடு பேசிக் கொண்டு இருப்பார் எனில், ஆசார்யாளின் பாதுகைகளுடன் பேசிக் கொண்டு இருப்பாராம். பக்தியினால் பாதுகைகளோடே பேசிக் கொண்டு இருப்பாராம். பரதாழ்வான் போல். பரதாழ்வானுக்கு எப்படி பாதுகாராஜ்யம் நடந்ததோ அதுமாதிரி. பரதாழ்வான் ராமபாதுகைகளோடே பேசுவார். எல்லாவற்றையும் சமர்ப்பிப்பார். ராஜ்யத்தில் என்னென்ன பேசவேணுமோ அதையெல்லாம் பெரிய அதிகாரிகளோடு பேசுவதுபோல் பேசிக் கொண்டு இருப்பார். பாதுகைகள் பதில் சொல்லுவார்கள். அதேமாதிரி அந்த உத்தரவுப் படி செய்வார் பரதன்.

**ஸ பாதுகாப்யாம் ப்ரதமம் நிவேத்ய சகார பம்சாத் பரதோ யதாவத் |**
என்று ராமாயணத்தில் வரும். அதேபோல் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் ஆசார்ய பாதுகைகளுடன் வார்த்தை சொல்லியாகும்.

ஆச்ரம ஸம்ப்ரதாயத்திற்கு பாரணம் ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகைகளே என்று பெரியாண்டவன் திருவுள்ளத்தை

அனுசரித்து ஒரு சில்பியைக் கொண்டு விமானத்திற்குள் பாதுகைகளை சித்ரமாக எழுதச் சொல்லி ஆச்ரமத்தின் சின்னமாக்கியாயிற்று.

தேரழுந்தூர் ஆண்டவனுடைய ஒரு முக்ய சிஷ்யர் வி கே ராமானுஜாசார்யரைப் பற்றி அவச்யம் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீமத் ஆண்டவனைவிட 21 வயது அதிகம். வி கே ராமானுஜாசார்யர் தியோஸா ஃபிஸிகல் ஸொஸைடியில் மெம்பர் ஆக இருந்தவர் அவர். அன்னி பெசண்டுக்குத் தொண்டர் அவர். பூர்வத்தில் பெரியாண்டவன் திருவடி. சிறுவயதில் எல்லா காலக்ஷேபங்களையும் ஒரு ஆசார்யரிடத்தில் முறையாகச் செய்தவர். ஆனால் எல்லாத்தையும் விட்டு விட்டார். வி கே ராமானுஜாசார்யர் ஆங்கில ராஜ்யத்தினால் திவான் பகதூர் பட்டம் பெற்றார். தனவான். அன்னி பெசண்ட் கொள்கை ப்ரசாரத்திற்காக நிறைய செலவழித்தார். அந்த காலத்து ஐ ஏ எஸ் அவர். வைஷ்ணவத்தை அடியோடு விட்டிருந்தார். ரெவென்யூ போர்ட் செக்ரடரியாக பெரிய பதவி வகித்தவர். ஏதோ ஒரு அத்ருஷ்டத்தினால் தேரழுந்தூர் ஆண்டவனை சேவிக்க வந்தார். சுமார் அறுபது வயஸ்ஸில் வந்தார். வந்தவர் ஏராளமான கேள்விகளுடன் வந்தாராம்.

தேரழுந்தூர் ஆண்டவன் சாதிச்சாராம். இதுவரைக்கும் படித்த மதாந்தர புஸ்தகம் எதையும் இனி சிலகாலம் பிரிக்கக் கூடாது. படிக்கக் கூடாது. அதெல்லாம் படிச்சுத்தான் மூளை கல்மஷமாய் போயிருக்கு. அந்த புஸ்தகம் எதையும் படிக்காம

இருந்து சில வர்ஷம் கழிச்சு வா! கேள்வி கேள். நான் பதில் சொல்றேன் என்றாராம் ஆண்டவன். அதேமாதிரி விகே ஆர் இருந்தார்.

வீ கே ராமானுஜாசார்யார் அதற்குப்பின் ஸ்ரீமத் ஆண்டவனிடம் காலக்ஷேபம் பண்ணி அதற்குப் பின் அவர் ப்ரசுரம் செய்த சம்ப்ரதாய புஸ்தகங்கள் அநேகம் அநேகம். அதெல்லாம் மொத்தம் அப்படியே தேரழுந்தூர் ஆண்டவன் வார்த்தையே. தேரழுந்தூர் ஆண்டவன் வார்த்தைகளே இருக்கும் விகே ராமானுஜாசார்யருடைய புஸ்தகங்களில்.வி கே ராமானுஜாசார்யர் எப்படி எழுதுவார் - ஆசார்யாள் அடியேனைக் கொண்டு எழுதியது என்றுதான் எல்லா புஸ்தகங்களிலேயும் எழுதுவார். வீ கே ராமானுஜாசார்யார் பாக்கி எதுவும் வைக்கவில்லை. எல்லா புஸ்தகமும் போட்டிருக்கார். அவர் எழுதியிருக்கின்றார் "நமதாண்டவன் எல்லா விஷயங்களுமே அழகாக சாதித்தாலும் பகவத் விஷயம் அதாவது திருவாய்மொழியின் அர்த்தம் நிரம்ப அழகாக சாதிக்கும்படி இருக்கும். ஏனெனில் ஆழ்வாருடைய அனுபவங்களை யெல்லாம் நமதாண்டவனிடம் கண்ணாரக் காணலாம்".

சம்ப்ரதாயமாகத் திருந்தினார் வி கே ராமானுஜாசார்யர். அவரை எவ்வளவு மாற்றினார் எனில்,தேரழுந்தூர் ஆண்டவன் திருவாக்காகவே அப்படியே பேசுவார் வி கே ஆர். அவ்வளவு மாற்றினார் தேரழுந்தூர் ஆண்டவன். எத்தனையோ பேரை ஆண்டவன் கடாக்ஷிச்சு திருத்தியுள்ளபடி.

ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் நல்ல அத்யாபகர் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஏள்ளியிருக்குங்கால் ஆண்டாள் ப்ரஹ்மோத்ஸவம். முன்னால் அத்யாபக கோஷ்டி,பின்னால் வேதபாராயண கோஷ்டி, இரண்டுக்கும் பின்னால் நிறைய பஜனை கோஷ்டிகள். அந்த காலத்துல பஜனை கோஷ்டிகள் அதிகம். ஒரு சமயம் பஜனை கோஷ்டி கூடவே ஏள்ளியாச்சாம் ஆண்டவன். அத்யாபக கோஷ்டியில் எப்போதும் எழுந்தருளும் ஸ்ரீமத் ஆண்டவன் போய் ஏன் பஜனை கோஷ்டியோட வரார்? என்று பார்த்தார்கள் எல்லாரும்.

ஆண்டவன்,"பாருங்கோ ! அவன் என்னமா பாடறான் பாருங்கோ!

ததி சோரம் ததி சோரம்னு சொல்லி எல்லாரும் வாத்யத்தை தட்றான். ஒருத்தன் ததி சோரம் னு சொன்னா மத்த எல்லாரும் ததி சோரம் ததிசோரம்னு சொல்லி ஜல் ஜல் ஜல்னு தட்றான். க்ருத சோரம்... க்ருத சோரம்...... நவநீத சோரம், நவநீத சோரம்.... கோபீ துகூல சோரம்...... கோபீ துகூல சோரம்..,, சோரம்னா திருடனை என்று அர்த்தம். தயிரை திருடினான். நெய்யைத் திருடினான். வெண்ணையை திருடினான். இடைப் பெண்களுடைய வஸ்த்ரத்தை திருடினான். அநேக ஜன்மார்ஜித பாப சோரம். எத்தனை ஜன்மத்துல பண்ணிவெச்ச பாபத்தை எல்லாம் திருடிண்டு போறான்". பஜனையைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுதாராம் ஆண்டவன். "பாருடா! நம் பாவத்தையெல்லாம் கண்ணன்

திருடிட்டான்னு சொல்லி குதிக்கறான் பஜனையில. எவ்வளவு ஆனந்தமா இருக்கு!"ன்னாராம்.

பக்தி என்றால் என்ன ? அதன் ரஸம் என்றால் என்ன? எந்த சமயத்திலும் எந்த இடத்திலும் பகவானை அனுபவிப்பதுதான் ஸ்வரூபம் என இருந்தார் தேரழுந்தூர் ஆண்டவன். ரிஷிகள் சொல்லியிருக்கா. பக்தி ரஸம் இருந்தால் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வரவேண்டும் என்று. அந்தமாதிரியான ஒரு மஹான். அவர் நடத்தி வைத்த சம்ப்ரதாயம் நம் ஆண்டவன் சம்ப்ரதாயம். யார் ஆச்ரமத்துக்கு வந்தாலும், அடா! இவன் நம்மைத் தேடி வரானே. இவன் குறை தீரணும். மனஸ்ஸுல ஏதோ குறை இருக்கும், நம்மை நினைச்சுண்டு வரான். குறை தீராதான்னு வரான். அவன் குறை தீரணும் என்று நினைத்துக் கொண்டாகுமாம் ஆண்டவன். நம் குறையை ஆண்டவனிடம் சொல்லித்தான் ஆகவேண்டுமா?. சொல்லவே வேண்டாம். 'அவன் குறை தீரவேணும் 'என்று ஆண்டவன் நினைக்கின்ற கடாக்ஷத்தாலேயே தீர்ந்துவிடும்.

இன்னும் ஆண்டவன் காலக்ஷேப காலங்களில் 'நான் க்ரந்த காலக்ஷேபம் சொல்லிவைக்க வரவில்லை. கூடிய வரையில் எல்லோரும் த்வேஷமில்லாமலும், பொய் சொல்லாமலும், கோபமில்லாமலும், கர்வமில்லாமலும், அஸூயை இல்லாமலும், தன்னுடைய தோஷங்களையே நினைத்து கொண்டும் சொல்லிக் கொண்டும், தான் செய்த பாபங்களை தெய்வத்தினிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டுமிருந்தால் ரொம்பவும் க்ஷேமமுண்டு. எல்லார்க்கும்

ஹிதமானதை நினைத்துக் கொண்டு பகவானிடம் மனது கரைந்து இருக்க வேணும். இதுதான் நான் சொல்லும் காலக்ஷேப'மென்று ஸாதித்தாகும்.

தேரழுந்தூர் ஆண்டவனுடைய அபிலாஷையே என்ன? வென்றால், 'நம் ஆத்மாஸுத்தமாகணும் என ஆசைப் படணுமே ஒழிய, நாம் வித்வான் என்று ப்ரஸித்தியாயிடணும்னு ஆசைப் படக்கூடாது. எந்த கர்வமும் கூடாது. வித்வத் கர்வம் கூடவே கூடாது' என்பதுதான். இதுதான் முக்யமான உபதேசம்.

நம்மாண்டவன் ஒருக்கால் ஆக்கூர் ஆண்டவனின் பூர்வாச்ரமத்தில் உபதேசித்தாயிற்றாம். " அப்பா! சரணாகதி பண்ணி வைப்பது என்றால் ஒரு ப்ரயோகத்தை நெட்டுரு பண்ணிக்கொண்டு ஒப்பிப்பது அல்ல. சிஷ்யனுடைய கஷ்டத்தை நினைத்து வருத்தப்பட்டு தெய்வத்தினிடம் போய் அழவேணும். அனுக்ரஹம் என்பது ஆசார்யனுடைய கவலைதான். ஆசார்யன் திருவுள்ளத்தில் இரக்கமடியாக தாயாரும் பெருமாளும் அருளுகிறார்கள். இந்த மாதிரி இரங்கி தெய்வத்தினிடம் போய் அழவேணுமே? எல்லோரிடத்திலும் இப்படி இரக்கம் உண்டாகுமோ ? உண்டாகவேணும்!. தெய்வம்தான் அந்த குணத்தையும் கொடுக்கவேணும்!!" என்று.

ஒரு சமயம் கடிகாரம் ஐந்து அடித்தது. சிஷ்யர்களில் ஒருவரிடம் கடிகாரம் என்ன சொல்கிறது ? என்றாயிற்று ஸ்ரீமத் ஆண்டவன். அஞ்சாகிறது என்றார் அவர். "அஞ்சு" என்று சொல்கிறது என்றார் ஆண்டவன். அஞ்சு = பயப்படு. நல்ல கார்யம் செய்ய நேரம் குறைந்து கொண்டே வருகிறது. காலம்

போய் விட்டால் என்ன செய்வது? என்று பயப்படு என்று கடிகாரம் ஞாபகப் படுத்துகிறது என்றார் ஸ்ரீமத் ஆண்டவன். எதிலும் நல்ல விஷயத்தையே பார்க்கும் ஸ்வபாவம் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு.

ஆண்டவன் தனக்குக் கொடுக்கும் த்ரவ்யங்களை காலக்ஷேபம் தன்னிடம் பண்ணுகிறவர்கள், ஸமாஸ்ரயணாதிகள் செய்துகொள்ள வருகிறவர்கள், இன்னும் ஏழை முதலிய பாகவதர்களுக்கும் சாதம் போடுதல் பகவத் கைங்கர்யம் முதலியது செய்கிறதுகளிலேயே உபயோகிப்பது வழக்கம். ஸ்ரீமத் ஆண்டவன் ஸர்வபூத ஸுஹ்ருத்தாகவும், சகல ஜன ப்ரியராகவும் எழுந்தருளியிருந்தாயிற்று.

ஏ எஸ் அய்யங்கார் என்ற மஹான் தேரந்தூர் ஆண்டவனின் சிஷ்யர். நல்ல கவி. ஸ்ரீமத் ஆண்டவனிடம் தாம் பெற்ற அனுபவங்களில் சிலவற்றை பாதூவிஜயம் என்ற ஸம்ஸ்க்ருத காவ்யமாக எழுதியுள்ளதாக சாதித்துள்ளார். சுமார் ஆயிரம் ஸ்லோகங்கள் இருக்கும். ஆனால் புத்தகம் கிடைக்கவில்லை. அவர் சாதித்துள்ளதாவது "நமதாண்டவனுடன் பலநாள் பழகினவர்களைக் காட்டிலும் ஒருநாளோ ஒரு பொழுதோ பழகினவர்களின் அனுபவம் ஆச்சர்யமாக இருக்கு. சிஷ்யர்களைக் காட்டிலும் சிஷ்யரல்லாதவர்கள் வெகு வ்ருத்தாந்தங்களைச் சொல்கிறார்கள். ஆச்சர்யமான ஆகையினால் நமதாண்டவன் ஸமாகமத்தில் வந்த எல்லோருமே தங்களுக்குத் தெரிந்த அனுபவங்களைத்

தெரிவித்தால் அவைகளையும் பற்றி ஸ்லோகங்கள் எழுதி வெளியிடலாம்" என்று.

## ஸ்ரீ நம்மாண்டவனிடம் ஸ்வரூப கிரந்தங்கள் காலக்ஷேபம் செய்த மஹான்கள்.

ஸ்ரீ ஆக்கூர் ரங்கநாதாசார்யர் (எங்களாண்டவன்), தென்பிரை வெங்கடராகவாசார்யர்( தென்பிரை ஆண்டவன்), ஸாங்காத்யாயி ஸ்ரீநிவாஸாசார்யர் (ஸ்ரீ ராமனுஜ யதீஸ்வரர்), திருக்குடந்தை வைராக்யநிதி நாராயண யதீஸ்வரர், ராயம்பேட்டை ஸ்ரீநிவாஸராமானுஜமஹாதேசிகன், இளங்காடு ஸ்ரீராமானுஜ பாதுகாசேவக யதீஸ்வரர், திவான் பகதூர் வி கே ராமானுஜாசார்யர், நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை ஏ எஸ் ஐயங்கார், ராஜாபகதூர் ஐதராபாக்கம் க்ருஷ்ணமாசார்யர், எஸ் எஸ் ராஜகோபாலாசார்யர், கல்யாணபுரம் எஸ் டி ஸ்ரீநிவாஸாசார்யர், ராயம் பேட்டை மைனர் கண்ணன், ராஜகோபால அய்யங்கார், அல்லுண்டு ஸ்ரீநிவாஸாசார்யர், கோவில் வெண்ணி பார்த்த சாரதி ஸ்வாமி, வாவாசிப் பேட்டை, ஸ்ரீநிவாஸாசார்யர், கவி சிம்மம் ஸ்ரீநிவாஸாசார்யர், மைஸூர் ஸம்ஸ்தானம் ஸோஸலை ஜோடிதார் ஸ்ரீநிவாஸாசார்யர்,வி கே ஸ்ரீநிவாஸாசார்யர் ( பட்டணம் மாமா), எம்பளச்சேரி கோபாலாசார்யர், மைஸூர் சக்ரவர்த்தி ஆசார்யர்,க்ருஷ்ணமாசார்யர் (ஸ்ரீகார்யம்), புதுகோட்டை ஜட்ஜ் ஸ்ரீநிவாஸாசார்யர், மன்னார்குடி எஸ் ஆர் ராஜகோபாலாசார்யர், ஸ்ரீவைகுண்டம் அட்வகேட் ஸ்ரீநிவாஸ தாதாசார்யர், தென்பிரை வ்யாகரணம் ஸ்ரீநிவாஸாசார்யர்,

அனந்தாசார்யர், மன்னார்குடி, கந்தாடை ராமானுஜாசார்யர், ஸ்ரீ வில்லிபுத்தூர் கவிதார்க்கிக சிம்மம் தாதாசார்யர், சக்ரவர்த்தி ஸ்ரீ ராம தேசிகாசார்யர், வக்கீல் வேதாந்தாசார்யர், சித்தாலம் புத்தூர் நாராயணாசார்யர், பண்டிட் ஸ்ரீநிவாஸாசார்யர்( பெரியத்தான்) ஸ்ரீநிவாஸாசார்யர் (சின்னத்தான்), வெள்ளக்குளம் அத்யாபகம் தேசிகாசார்யர், பாகவதர் ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை ஸப் ஜட்ஸ் ராமஸ்வாமி அய்யங்கார், விளக்கொளி ரங்காசார்யர், க்ருஷ்ணமாசார்யர், கோபாலாசார்யர், வடுவூர் கனபாடி நரஸிம்மாசார்யர், தேரழுந்தூர் க்ருஷ்ணமாசார்யர், வேளிய நல்லூர் வி ஆர் எஸ் தாதாசார்யர், அம்பா சமுத்ரம் ஏ கே ஸ்ரீநிவாஸ தாதாசார்யர், ஆக்கூர் வரதாசார்யர் ( திருப்பதியில் ஆண்டவன் ஆச்ரமத்தை ஸ்தாபித்தவர்), புரிசை பாஷ்யாசார்யர், மலைமேல் கல்யாணாசார்யர், ராஜகோபாலாசார்யர், திருக்குடந்தை ஸி கே ஸ்ரீநிவாஸாசார்யர், கிடாம்பி அட்டவணை ராமஸ்வாமி அய்யங்கார், நாச்சியார் கோவில் நடாதூர் வேதாந்தாசார்யர், மதறாஸ் அட்வகேட் ஈயுண்ணி ஆர் கோபால ஸ்வாமி அய்யங்கார், மதுரை அட்வகேட் ராமய்யங்கார், மதுரை கொண்டங்கி க்ருஷ்ணமாசார்யர், சாக்கை வரதாசார்யர், ஈச்சம்பாடி ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், திருக்குடந்தை ஸ்ரீநிவாஸராகவாசார்யர் (திருக்குடந்தை ஆண்டவன்) ஸ்ரீவில்லிபுத்தூர் தேசிகாசார்யர், புதுகோட்டை திவான் க்ருஷ்ணமாசார்யர், காரைக்குடி ரகுநாத தாதாசார்யர், மதுரை அட்வகேட் டி R ஸ்ரீநிவாஸாசார்யர் இன்னும் அநேக வ்யாபக வித்வான்கள். ரஹஸ்ய க்ரந்தங்கள், பகவத் விஷயத்திற்கும், பல வித்வான்களின் தேவிகளும் அந்வயிப்பர்.

தேரழுந்தூர் ஆண்டவன் திருக்குடந்தை மார்க்கமாக பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளியாச்சு. அது சமயம் அங்கு பத்து வருஷ காலமாக மழையில்லாமலிருந்தது. லக்ஷ தீபமும் கோவிலாழ்வார் திருமஞ்ஜனமும் செய்தருளியாச்சு. யதேஷ்டமாய் மழை பெய்தது. "மழைச் சாமியார்" என்ற பெயரும் வந்தது. வடக்கே புஷ்கர க்ஷேத்ரத்திலிருக்கும் மங்களிராம் என்னும் ஷேட், தர்மப்ரபு திவ்ய தேசங்களுக்குத் திருப்பணி கைங்கர்யம் செய்து வருகிறார் என்பது கேட்டு இந்த வரதன் ஸந்நிதியிலும் கைங்கர்யம் செய்ய வேணுமென்று தெரிவிக்க, அவரும் ஸந்தோஷமாய் இரண்டு லக்ஷம் ரூபாய்வரையில் செலவு செய்து திருப்பணி வேலை செய்தும் ரொம்ப செலவுகளுடன் ஸம்ப்ரோக்ஷணமும் செய்தார் ! அத்திகிரி அருள் முகிலையும், தூப்புல் வள்ளலையும் அனவரதம் அனுபவித்துக் கொண்டு காஞ்சியில் எழுந்தருளியிருந்தாயிற்று.

## திருநாடலங்கரித்தல்

23 சாதுர்மாஸ்யங்களுக்குப் பின் 1942 ப்ரஜோத்பத்தி வருஷம் ஆவணி மாதம் காஞ்சீபுரம் பாதுகாச்ரமத்தில் மஹோன்னதமான ரீதியில் ஷஷ்ட்யப்த பூர்த்தி திருநக்ஷத்ரவைபவம் நடத்த சிஷ்யர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமயம் ஒருமாதம் முன்பாகவே திடீரென்று ஆடி க்ருஷ்ண பஞ்சமியில் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் திருநாடலங்கரித்தாயிற்று. அந்தோ ! பகவத் விஷய அனுபவத்தின் நடமாடும் திருவுருவம் திருநாடலங்கரித்தாயிற்று